386

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை


| மலர்: 10<br>இதழ்: 6<br>விலை 25 ந.பை | விளம்பி ஷு புரட்டாசி ௴<br>செப்டம்பர்—அக்டோபர் '58 | வருட<br>சந்தா<br>ரூ. 2-25 |
|---|---|---|


OFFICE OF THE REGISTRAR
28 OCT 1958
MADRAS

386
4-58



நீர்மையிலர் ஆயினும் நீறணிந்தார் என்று
ஆதிரையில் அதிகப் பொன்னளித்து அமுதூட்டும் நரசிங்கர்
(பெரியபுராணச் சித்திரவிளக்கம் 55; பக்கம் 243

# உள்பொருள்

பக்கம்

1. லயம் (திருப்புகழ் மணி) ... 241
2. நரசிங்கமுனையரைய நாயனார் (கி. வா. ஜகந்நாதன்) ... 243
3. ஐயடிகள் மெய்யுரை (ரஸபதி) ... 245
4. அண்ணாமலையில் அருணகிரிவிழா ... 255
5. சசிவன்ன போதம் (கே. எஸ். சுந்தரமூர்த்தி) ... 259
6. உபநிஷதங்களின் உள்ளொளி (ஸ்ரீமதி விஜயலட்சுமி) 265
7. முனிவர் காட்டிய முதல்வன் (சி. குமாரஸ்வாமி) ... 272
8. 'திருபந்தணைநல்லூர்' திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 274
9. வினைவிடுதல் (கி. வா. ஜ.) ... 280
10. செப்பிடுவித்தை (V. R. G.) ... 283
11. Divine life and universal service (*Thiruppugal Mani*) ... 287

---

## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ˝ முதல் பங்குனி மீ˝ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத்தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும் வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ˝ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

---

**குறிப்பு:** முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| மலர் 10 | விளம்பி ஷு புரட்டாசி மீ<br>செப்டம்பர்-அக்டோபர்—1958 | இதழ் 6 |
|---|---|---|

# லயம்

(திருப்புகழ்மணி)

இசைந்து ஒன்றானால் லயம் என்பார்கள். மனிதனுக்கு ஆனந்தம் லயத்தினால் வரும். லயத்தையும் ஆனந்தத்தையும் கொடுப்பது ஒன்று உண்டு. அது ஒன்றேதான், அதைத்தான் கடவுள் என்றும் பிரம்மம் என்றும் சொல்லுவார்கள்.

*" போக்கும் வரவும், இரவும் பகலும், புறம்பும் உள்ளும்,*
*வாக்கும் வடிவும், முடிவும் இல்லாத தொன்று வந்துவந்து*
*தாக்கும், மனோலயம் தானே தரும், எனைத் தன்வசத்தே*
*ஆக்கும் அறுமுகவா! சொல்லொணாது இந்த ஆனந்தமே."*

என்பது கந்தரலங்காரம்.

உலகில் எங்கும் பரந்து நிற்கும் தெய்வம் ஒன்று தானே. இரண்டாவது பொருள் இல்லை. ஆதலால் உலகமெலாம் வேற்றுமை நீங்கி ஒற்றுமை யடைய வேண்டுமானால், எல்லா ஜீவராசிகளும் முழுமுதல் கடவுளாய் விளங்கும் ஒன்றினோடு இசைவு படல் வேண்டும்.

கால லயம், இசை லயம், மனோ லயம், இப்படி யென்றெல்லாம் மொழிவார்கள்.

---

ஆடரவம் பெருகி அனலேந்திக் கைவீசி, வேதம்
பாடலினால் இனியான் உறைகோயில் பாதாளே!

சங்கீத கச்சேரி. பல்லவி பாடுகிறார்கள் ரஸிகர்கள். எல்லோரும் ஒற்றுமையாகத் தாளம் போட்டு வருகிறார்கள்.

நீட்டம் குறைவு இல்லாமல் ஒரே அளவாய் காலத்தை வகுத்து லயம் ஏற்பட்டு வருவதில் ஓர் உணர்ச்சி. சிலர் மெய்ம்மறந்து ஆட ஆரம்பித்து விடுகிறார்கள். ஒரே ஆனந்தம்தான். மணிக்கணக்காய் வெகு நேரம் ஆனாலும் காலம் சென்றது தெரிகிறதில்லை. மனம் ஸமகால அளவில் லயித்து விடுகின்றது.

உலக நிகழ்ச்சிகளை மறந்து தாளம் போட்டுக் கொண்டே மனத்தை ஓர் நிலையில் நிறுத்திவிடுகிறார்கள். சாதாரணமாய் காலம் வாழ்வைஓட்டி நம்மைக் கணக்குப் பண்ணி விடுகிறது. காலம் நம் வாழ்க்கையை ஓட்ட இடம் கொடாமல், நாம் காலத்தை ஓட்டிக் கணக்காய் விட்டுவிடல் வேண்டும். காலம் நம்மைத் தள்ளாது நாம் காலத்தைத் தள்ள வேண்டும். அதுதான் தாளம். ஆண்டவனைப் பக்தியால் நினைந்து பாடி நாமே காலத்தைத் தாளத்தால் தள்ளிவிட்டால், அந்தக் காலம் நின்ற காலமே யன்றி நம்மைத் தள்ளும் காலமன்று; ஓட்டும் காலமும் அன்று. ஆகையால் பக்தர்கள் காலத்தை அளந்து விடுவதால் காலம் பக்தர்களை அளக்கமுடிவதில்லை. கால லயத்தால் காலத்தை வெல். சங்கீத ஸ்ருதி லய, காலலய, ஸ்வரலய, மனோ லய, பஜனைகளில் லயப்படல் உலகில் ஆனந்தத்தை வளர்க்கும் வழி. "காலத்தை வென்றிருப்பார் சிவ யோகிகள்" என்றார் அருணகிரி.

கீர்த்தனங்களாலும் திருப்புகழாலும் மற்ற விதங்களாலும் பஜனைகள் செய்யும் காலத்து ஜாலரை கைவிடுவதில்லை. ஏன்? காலலய விகாசனம் பஜனை. மனோ லயமும் ஏற்படுகிறது.

---

தோகைநன் மாமயில்போல், வளர் சாயல் தூமொழியைக்
பாகமும் வைத்துகந்தான் உறைகோயில் பாதாளே [கூடப்

600 008

# நரசிங்க முனையரைய நாயனார்

(கி. வா. ஜகந்நாதன்)

நடுநாட்டின் ஒரு பகுதிக்குத் திருமுனைப்பாடி நாடு என்று பெயர். சுந்தரமூர்த்தி நாயனார் திருவவதாரம் செய்த திருநாவலூர் அந்த நாட்டில் உள்ளது. அந்தத் திருமுனைப்பாடி நாட்டை நரசிங்கமுனையரையர் என்ற அரசர் ஆண்டுவந்தார்.

பாரியின் மகளிராகிய அங்கவை சங்கவை என்னும் மகளிரைத் திருக்கோவலூரில் இருந்த தெய்வீகன் என்ற மன்னன் மணம்செய்து கொண்டான் என்றும், அந்தத் திருமணத்தை ஔவையார் முன் இருந்து நடத்திவைத்தாரென்றும் ஒரு வரலாறு வழங்குகிறது. அந்தத் தெய்வீகனுடைய மரபில் வந்தவர் நரசிங்கமுனையரையர் என்று ஒரு புராணம் சொல்கிறது.

நரசிங்கமுனையரையர் சிறந்த சிவபக்தர். தம்முடைய நாட்டிலுள்ள சிவாலயங்களில் வழிபாடுகள் குறைவின்றி நடைபெறும்படிப் பேணிவந்தார். அக்காலத்தில் திருநாவலூரில் ஆரூரர் என்னும் திருநாமத்தோடு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம் செய்து வளர்ந்துவந்தார். திருநாவலூருக்கு நரசிங்கமுனையரையர் சென்றிருந்தபோது அப்பெருமானின் உருவப் பொலிவையும் பேரறிவையும் தெரிந்து அவரை அழைத்துவந்து வளர்த்து வந்தார். இறைவன் அவரைத் தடுத்தாட்கொண்ட பின்பு பல தலங்களுக்குச் சென்று அப்பெருமான் திருவாரூரையே தம் இருப்பிடமாகக் கொண்டார்.

நரசிங்கமுனையரையர் வீரத்தில் சிறந்தவர். பல போர்களில் வெற்றிபெற்றவர். இறைவனுடைய அடியார்களை வணங்கித் தொண்டு புரிவதே பெரும்பேறு எனக் கருதி ஒழுகிவந்தார்.

---

பெண்ணமர் மேனியினான் பெருங் காடரங் காக ஆடும்
பண்ணியல் பாடலினான் உறை கோயில் பாதாளே

திருவாதிரை நட்சத்திரத்தன்று இறைவனுக்குச் சிறப்பான பூஜை முதலியன புரிவித்து வழிபடுவார். அப்போது வருகிற சிவனடியார்களுக்கெல்லாம் அறுசுவை உண்டியும் ஆடையும் வழங்குவார். அவற்றுடன் அவர்களுக்கு நூறு பொன்னுக்குக் குறையாமல் அளிப்பார். இவ்வாறு நீறணியும் தொண்டர்களுக்கு வேண்டிய வழிபாடுசெய்து பொருள் வழங்கியமையால் வரவர அடியார்களின் கூட்டம் மிகுதியாயிற்று.

இப்படித் திருவாதிரைத் திருநாளில் அடியார் வழிபாடு நிகழ்ந்து வருகையில் ஒருமுறை வந்திருந்த அடியவர்களில் ஒருவர் காமக்குறிப்புத் தோற்றும் உருவம் உடையவராய் இருந்தார். அவருடைய நெற்றியில் திருநீறு இருந்தது; ஆயினும் அவருடைய அலங்காரங்களும் பார்வையும் காமக்குறிப்பை வெளிப்படுத்துவனவாக இருந்தன. அவற்றைக் கண்டு அருகில் இருந்தவர்கள் அவரிடம் அவமதிப்புடையவராகி ஒதுங்கிச் சென்றார்கள். அந்தக் கூட்டத்தில் அவர்மட்டும் தனியே நின்றார்.

இதை நரசிங்கமுனையரையர் கண்டார். எத்தகைய ஒழுக்கம் உடையவரானாலும் திருநீறு அணிந்திருந்தால் அவரை இகழக்கூடாது என்ற கொள்கை உடையவர் மன்னர். ஆதலின் அந்த அடியாரை அணுகி வணங்கி அவருக்கு யாவருக்கும் கொடுப்பதைப்போல் இரண்டு பங்கு பொன்கொடுத்து வழிபட்டார்.

இறைவனுடைய பேரருளை நினையச்செய்யும் திருநீற்றுக்கு உரிய மதிப்பை மறந்து மற்றவற்றில் மனம் போக்கினால் வந்தவருடைய சீலம் முதலியவற்றில் ஆராய்ச்சி தலைப்படும். பொன் அழுக்கான இடத்தில் கிடந்தாலும் பொன்னைப் பெரிதாக மதிப்பவன் அதை வெறுக்காமல் கைக்கொள்வான். அதுபோல திருநீறு அணிதலே ஒரு பெரிய செயல் என்று எண்ணிய நரசிங்கமுனையரையர் அதனை அணிந்தவரைக் கண்டு, பிறவற்றைக் காணாது இவரும் சிவனுக்கு அடியார் என்று வணங்கியது அவருடைய திண்ணிய நெஞ்சத்தைக் காட்டுகிறது.

---

விண்டவர் தம்புரம் மூன்றெரி செய்துரை வேத நான்கும்
பண்டிசை பாடலினான் உறை கோயில் பாதாளே [அவை

11-ம் திருமுறை 5

# ஐயடிகள் மெய்யுரை (2)

(ரஸபதி)

## கோடி மூடுமுன் கோடிகா

போகிருர்; போய்க்கொண்டே யிருக்கிருர். அகமே புறம்; இது அனுபவிகளின் அறவுரை. அடிகள் உள்ளம் எதை நினைத்து அலறுகிறதோ, அதிர்ச்சிக்கு உரிய அச் செய்திகள் போகும் இடமெல்லாம் புலனுகின்றன.

தலையில் மாலை தரித்தனர். மலர்க் கண்கட்கு மை தீட்டினர். கோடித் துணியால் உடலை மூடினர். ஆஅ என்று அலறி யழுதனர். செல்லும் வழியில் இப்படி ஒரு செய்தி.

கண்டார். கலங்கியது மனம். கெட்ட எண்ணம்; கேடு கெட்ட புத்தி; வம்பு; வழக்கு; போட்டி; பொருமை; சாதிச் சண்டை; மதகலகம்; இவ்வளவேயான உலகம், இந்தப் பரிதாப இறுதியை எண்ணுமேல், எவ்வளவு நன்ரு யிருக்கும்? எவ்வளவுதான் ஓதிஞலும், உலகம் ஒரு குப்பை. நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும், அது வால் கிளப்பிச் செல்லும்; அவ்வழி வகையை அறியோமா! அது எப்படியோபோகட்டும். நெஞ்சே ஏமாந்துபோகாதே! கண்முன் உலகப் போக்கைக் காண்கிருய்!

**காலைக் கரையிழையால் கட்டித்தம் கையார்த்து**
**மாலை தலைக்கணிந்து மையெழுதி—மேலோர்**
**பருக்கோடி மூடிப் பலரழா முன்னம்**
**திருக்கோடி காஅடைநீ சென்று**

[கரையிழையால்-துணியின் கரையைக் கிழித்த இழையால். உயிர்நீங்கிய கொஞ்ச நேரத்தில் உடல் விறைத்துக் கொள்ளும். கால்களையும் கைகளையும், பாடையிலும் சிதையிலும் ஒழுங்காக அமைக்க முடியாது. அதற்காக உடனே கரையிழையால் அவைகளைக் கட்டி வைப்பர். கரையிழை-ஆடையின் உரமான அங்கம். ஆர்த்து-கட்டி. பருக்கோடி-பெரிய புதுத்துணி. கைகளைக் கால்களைக் கட்டல்; மாலை

---

**கொல்லை விடையுகந்தான் குளிர்திங்கள் சடைக்கணிந்தான்**
**பல்லிசை பாடலிஞன் உறை கோயில் பாதாளே**

சூட்டல், மை எழுதல், கோடித்துணியால் மூடல் முதலிய வைகளைப் பிண அணி என்பர்.]

## கடைவாய் விடுமுன் இடைவாய்

எதுவும் இங்கு நிலைப்பது இல்லை. இரவும் பகலும் போல் இன்ப துன்பங்கள், வந்து வந்து போகின்றன. தோற்றம் எல்லாம் மாற்றம். உலகம் ஒரு மேடை. அதில் காலம் எனும் திரை. மனை மக்கள் முதலினோர், உறவு எனும் வேடம் தாங்கி ஆடிப்பாடி அலுப்பர். ஆட்டம் முடியும். கூட்டம் கலையும்.

என்ன வியப்பு! எவ்வளவு உறவினர்! எவ்வளவு நண்பர்கள்! தேனைமொய்த்த ஈக்களைப்போல், இதுவரை நெருங்கியிருந்த இவர்கள், வீண் என்று அல்லவா இன்று என்னை விட்டு விட்டனர்!

உணர்ந்த உள்ளம் உடைந்தது. தள்ளாடியது உடல். சார்ந்த கொடிறு சரிந்தது. திறந்தவாய் திறந்த வாய்தான். பொலபொலத்து உயிர் போய்விட்டது. என்ன வேதனை!

மனமே! இவ்வளவுதான் உலகம். இருக்கும் கடை வாய் விழுமுன், எச்சரிக்கை செய்கிறேன். திருஇடை வாய்ச் சிவனார் திருவுருவை நினை! திருவிடைவாய் மேவும் சிவமே என்று உருவேற்றி யிரு!

"மாண்டுவாய் அங்காவா முன்னம், மடநெஞ்சே!
வேண்டுவாய் ஆகி, விரைந்தொல்லைப்—பாண்டவாய்த்
தென்னிடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை"

[அங்காவாமுன்-திறந்து கொள்ளுமுன். வேண்டுவாய் ஆகி-விருப்பம் உடையை யாகி. பாண்டவாய்-(மண்) பாண்டம் போன்று அகன்ற வாயினை யுடைய காவிரித் துறையின். தென் இடைவாய்-தெற்கில் உள்ள திருஇடை வாய்ப்பதியின்.]

## களம் தவிர்க்கும் நெடுங்களம்

அழகிய கண் அவிந்தது. செவியோ செவிடுபட்டது. மூச்சும் இல்லை பேச்சுமில்லை. இரத்த ஓட்டம்

---

பூமருவும் குழலாள் உமைநங்கை பொருந்தி யிட்ட நல்ல பாமருவும் குணத்தான் உறை கோயில் பாதாளே!

தடைப்பட்டது. இருந்த உணர்வு ஒழிந்தது. என்ன இது?

அலறினர் பலர். நாடி சோதனை நடந்தது. துடிப் பில்லை; ஆம். முன் இருந்த பெயர் முடிந்தது. பிணம் என்ற பெயர் பிறந்தது,

அப்பா! காலைக் கையைக் கட்டுங்கள்; சீக்கிரம் பாடையில் ஏற்றுங்கள்; சுடுகளம் நோக்கிச் செல்லுங்கள்! ஐயோ! எந்த வீட்டிலும் ஒருநாள் இந்தக் குரல்!

மதியிலாத மனமே! வருந்த வைக்கும் அந்நாள் வரு முன், காவிரித் தென்கரையின் எட்டாவது தலமான நெடுங்களத்து எம்மான் திருவடிகளை நினை! இடையூறு தீரும்; ஏறு நடைகூடும்; வாழ்வழி ஆகும்.

"தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக்—கட்டி
எடுங்களத்தா என்றுமுன் ஏழைமட நெஞ்சே!
நெடுங்களத்தான் பாதம் நினை"

[பெட்ட-வீணான; வறிதான. எடுங்கள் அத்தா எனப் பிரிக்க.]

## வழிகாட்டும் குழித்தலை

அழுகி நாறும் ஆக்கை. வளர்ச்சி தளர்ச்சியான வாழ்க்கை. கடைசி நாளில் உடலைக் கழுகுண்ணும்; கழிந்து சிதையும் காயம் இதை நம்பாதே மனமே! சில்லிக் குடநீர் சிந்துவதுபோல, ஓட்டை உடலிலுள்ள உயிர் ஒழுகிவிடும்! ஓடிவிடும்; இருக்கும் காலம்வரை, காவிரித் தென்கரை கடம்பர் கோயிலை எண்ணியிரு! அங்கிருக்கும் பெருமானை ஏத்தியிரு!

"அழுகு திரிகுரம்பை ஆங்கதுவிட்(டு) ஆவி
ஒழுகும் பொழுதறிய ஒண்ணா—கழுகு
கழித்துண்(டு) அலையாமுன், காவிரியின் தென்பால்
குழித்தண் டலையானைக் கூறு"

[திரி(தல்)-வேறுபடுதல். குரம்பை-இருப்பிடம்; கூடு; உடல். குழித்தண்டலை-கீழ்க் கொங்குநாட்டின் கிழக்

அருந்தவ முனிவரொடு ஆல்நிழல்கீழ்
இருந்தவன் வளநகர் இடை மருதே

கெல்லை; குளித்தலை என்று இன்று கூறப்பெறும் தலம்.]

## திருவானைக்காத் திறல்

சுற்றிக் கூடினர் சுற்றத்தார். இறந்தான் குணங்களை எடுத்துக் கூறினர். நிலைகுலைந்த அங்கங்களை நேராக்கினர். ஆகம் தழுவினர். ஆஅ! ஆஅ என்று ஆவலித்தனர்.

கம்பீரமான தோற்றமுளாய்! பெருமித நடைப் பெரியோனே! சிறந்தனையே! எம்மை மறந்தனையே! கைவிட்டு இறந்தனையே! இது தகுமா ஐயா! இது முறையா அப்பா! என்று ஓவென்று கதறும் நாள் ஒருநாள்.

மனமே! வேதனையான இந்நிலை விளையுமுன், போ! புனித திருஆனைக்காவிற்கு ஓடிப்போய்விடு! ஆனை துரத்தி வந்தாலும், ஆனைக்காவில் நுழையாது; அத்தலத்தில் அடைக்கலம் ஆனால், அபாயம் ஒருநாளும் இல்லை. தெரிகிறதா!

"குழீஇயிருந்த சுற்றம் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாம்—தழீஇயிருந்தும்
என்ஆனைக்(கு) ஆவா இதுதகா தென்னுமுன்
தென்னானைக் காஅடைநீ சென்று"

[குழீஇ-கூடி. வழீஇ-வழுவி. ஆனைக்கு-யானை போன்ற கம்பீரமான இவனுக்கு. தென்-அழகிய; அல்லது தென்திசையில் உள்ள எனினும் ஆம்.]

## தெய்வத் திருமயிலை

குயிலொத்த தலைமயிர், கொக்குப்போல் வெளுக்கும். பெருகிய இருமல் பிறக்கும். இப்படி நரைவந்தால், திரை வரும்; நரையும் திரையும், ஆட்டம் காட்டும் மூப்பிற்கு அறிகுறி. அடுத்து என்னவரும் என்று அறிவாய் அல்லவா! அதற்குமுன், புனித அத்தலத்திற்குப் போய்விடு! எது அப்பதி என்கிறாயா? கேள்!

புன்னைமரச் சோலைகள் எங்கும் பொருந்தி யிருக்கும்; கடல் கரையைச் சார்ந்த கம்பீரமான தலம்; தொண்டை

---

நீற்றவன் நிறைபுனல் நீள்சடை மேல்
ஏற்றவன் வளநகர் இடை மருதே

நாட்டுத் திருப்பதி. ஏன் இன்னம் புரியவில்லையா? ஆம். அதுதான் திருமயிலை. கற்பகாம்பிகையுடன் திருக்கபாலீசர் இனியராக அங்கு எழுந்தருளி யிருக்கிறார். நிமலமாக அங்குள்ள கோயிலைச் சதாநினை! இன்பம் தரும் அந்தப் புண்ணியம் உனக்கு இல்லையானால், திறந்தவாய் மூடாமல், வாழ்க்கையில் ஆயாசம் கொண்டு அவதிப்படு! போ! போ! மோசமான உனக்கு, அவ்வளவுதான் சொல்ல முடியும்!

"குயிலொத்(து) இருள்குஞ்சி கொக்கொத்(து) இருமல்
பயிலப் புகாமுன்னம், நெஞ்சே!—மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாயின்,
இருப்பின்னை அங்காந்(து) இளைத்து"

[ஒத்து-போல. இருள்குஞ்சி-கறுத்த தலைமயிர். கொக்கு நிறம்போல் வெளுத்து. பயில-விளைய. புன்னை—தலவிருட்சம். கானல்-சோலை; இது நெய்தல் நிலக் கருப்பொருள். அங்காந்து-மூப்பின் அடையாளமாகத் திறந்தவாய் திறந்த படியிருந்து. பின்னை அங்காந்து இளைத்து இரு என்று இயைக்க.]

## வாழ்விக்கும் வளைகுளம்

இதோ ஒரு பெரிய அனுபவம். இறந்த பிரேதத்தைப் புறங்காட்டிற்கு எடுத்துப் போகின்றார். தொடர்பு கொண்ட மனையாள், தெருவில் நின்று தேம்புகிறாள். வீடும் வாசலும் வீட்டளவே ஆயின.

அடடா! இறந்து விட்டாரா! உம். சரி, அவ்வளவு தான் என்று, நண்பர் மொழிகளும் இப்படி மடங்கி அடங்கி மறந்தன. சிலர்மட்டும் மயானம்வரை சென்றனர். இவர்கள்மட்டும் உடன்கட்டை ஏறுவரா என்ன? கொள்ளி வைத்துக் குடமுடைத்ததும், நீர்நிலை தேடினர். முழுக்குப் போட்டனர்; தீர்ந்தது உறவு என்று திரும்பினர்.

உனக்கு அறிவிருந்தால், உரைத்த இவைகளை உணரலாம். உய்தி யடையலாம். திருவளைகுளம் என்று ஒரு பதி உண்டு. அது, "வளைகுளமும் மறைக்காடும் மன்னினானை" எனப் பெறும் தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று

---

உடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை எம்இறையே

வாயார அங்கிருக்கும் பரமனை வாழ்த்திக் கொண்டேயிரு! வாழ அதுதான் வழி!

"இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே—நல்ல
கிளை குளத்து நீரளவே; கிற்றியேல் நெஞ்சே!
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து"

[இல்லும்-மனைவியும். சொல்லும்-(தேறுதல்) சொற்களும். நல்லகிளை-(மயானம் வரை தொடரும்) உத்தம உறவினர். கிற்றியே-வன்மையையாயின்: அல்லது, வல்லவாறு எனினுமாம். வளைகுளம்-"வளைகுளமும் தளிக்குளமும்" என்பது அடைவு திருத்தாண்டகம்.]

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே! விழிஅம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே! விம்மிவிம்மி, இரு
கைத்தலைமேல் வைத்தழும் மைந்தரும் சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே"

என்ற பட்டினத்தார் பாடலும் இங்குக் கருதத்தகும்.

## சாயுமுன் சாய்க்காடு

கட்டு வாலிபமானது ஒருகாலம். அஞ்சனம் தீட்டிய கண் மணைவியும் அருவறுத்தது ஒருகாலம். அந்திமகாலம் அணுகுகிறபோது, சாக்கடையான இவ்வுலகம், இப்படித்தான் ஒதுங்கிவிடும். அதைக்குறித்து மனமே! அழுங்காதே! சரீரம் விழுமுன், திருச்சாய்க்காட்டிற்குப் போ! அது காவிரி வடகரையில் உள்ள ஒன்பதாவது பதி. குவிந்த மனம் கொள்! அத்தா அடைக்கலம்! அருளாளா! உனக்கே அடைக்கலம் என்று கைகுவித்துக் கும்பிடு! பஞ்சாகிக் கவலை பறந்தொழியும்!

"அஞ்சனம்சேர் கண்ணார் அருவறுக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலம் கோடாமுன்—நெஞ்சமே!
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து"

[பதமாய்-பருவமாகி, கோடாமுன்-(கூனுகி) வளையுமுன். காடு போய்க்கூட என இயைக்க. காடு-சுடுகாடு. போய் கூட-போம் நிலைவந்து நேர.]

---

கணைதுரந் தடுதிறல் காலற் செற்ற
இணையிலி வளநகர் இடை மருதே

## பாச்சிலாச்சிராமம் பார்

எடுத்து மருந்துச் சரக்குகளை இட்டார். இருநாழி நீர் வார்த்தார். உழக்காய்ச் சுண்டக் காய்ச்சினர். சிறுகரண்டியளவு நெய் கலந்தார். உறவினர் இவ்வளவும் செய்து உண்பிக்க முயன்றனர். பேருன உயிர் அதற்குள் பிரிந்து விட்டது.

எப்படி யிருக்கும் அப்போது? குய்யோ முறையோ என்று உறவினர் குமுறினர். அந்த அனுபவம் நமக்கு நேருமுன், மனமே! திருப்பாச்சி லாச்சிராமத்தைச் சேர்ந்துவிடு! தீரா நோய் தீர்க்கும், அங்கிருக்கும் தெய்வம்; வாழ உனக்கு அதுவே வழிகாட்டும்!

"இட்ட குடிநீர் இருநாழி ஒருழக்காய்ச்
சட்டஒரு முட்டைநெய் தான்கலந்(து)—அட்ட
அருவாச்சார் என்றங்(கு) அழாமுன்னம் பாச்சில்
திருவாச்சி ராமமே சேர்"

[இட்ட-(அடுப்பிலேற்றிக்) காய்ச்சிய. குடிநீர்-கியாழம். சட்ட-செம்மையாக; அகர ஈற்று இடைமொழி. முட்டை-சிறிய கரண்டி. அட்ட-வார்த்து ஊட்ட. அரு ஆச்சார்-உயிர் அகன்றார்; மரூஉ வழக்குமொழி. திருப்பாச்சிலாச் சிராமம் என்பது, காவிரி வடகரையில் உள்ள 62-ஆம் தலம்.]

## சிராமலையான் சேவடியே சேர்

நலமான உடல் ஒருநாள் நாறும். ஒழிந்தது உயிர். அழிந்தது வாழ்வு. அழுது என்ன பயன்? (இனியும் வைத்து) இராமல், ஐயா! எடுத்துச்செல்! கொளுத்திவிடு என்று சொல்லும் காலம் வருமுன் மனமே! திருசிராமலைச் சிவனார் திருவடிகளை அடை!

"இராமல்ஐயா! கொண்டுபோ என்னுமுன் நெஞ்சே!
சிராமலையான் பாதமே சேர்!"

## இழவு வருமுன் மழபாடி

இருக்கும்போதே இழவு கொண்டாடுவர். கூடிக் கூடிப் பேசிக் குமுறுவர். மேல்விழுந்தே உற்றார்

---

கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநகர் இடை மருதே

அழுவர். இந்நிலையில் உயிர் பிரியும். அந்நிலை நேருமுன் மனமே!

"மழபாடி

ஆண்டானை ஆரமுதை
நீண்டானை நெஞ்சே நினை" என்கிறார்.

"மன்னே மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே உன்னை யல்லால், இனியாரை நினைக்கேனே"

என்ற திருவாசகம், இங்கு நினைவில் எழுந்து நிருத்தம் புரிகிறது அல்லவா!

## கள்ளவினை கலவா வழி

கள்ளத்தால் நம்மைக் கொள்ளை கொள, முன் வினைகள் வந்து வந்து மோதும். அத்திருட்டு வினைகளை விரட்டியடிக்க, தென்திருவாப்பாடித் தெய்வத் திருவடிகளை, நினைக்கும் திறமுளதேல் நினை! அது, பசுமேய்த்த சண்டேசர்முன் விமலர் வெளிப்பட்ட இடம். அவர்க்குப் பேறு தந்த பெரும்பதி.

## வாஞ்சை தரும் காஞ்சி

என்ன ஆனாலும் சரி, மனமே! கேள், உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். திருக்காஞ்சி ஏகாம்பர நாதனை, இருக்கும்போதே இறைஞ்சுதல் செய்! "காஞ்சியைத் தரிசியாத ஜன்மம் கழுதை ஜென்மம்" என்பர்.

"என்னெஞ்சே! உன்னை இரந்தும் உரைக்கின்றேன்;
கன்னம்செய் வாயாகில் காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத்(து) ஆனை உரித்தானை, வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு"

[கன்னம் செய்வாயாகில்-செவிசாய்த்துக்கேட்பாயேல். வல்நெஞ்சு ஏய்-கொடிய மனம்கொண்ட. மா-பெரிய. கம்பத்து-நடுக்கம் விளைவிக்கும். வண்கச்சி-வளமுள்ள காஞ்சி; அம்மை அறம்வளர்த்த இடம்; முத்திதரும் ஏழ் நகருள் ஒன்று. ஏகம்பம்-ஏகாம்பரம்; ஆம்ப்ரம்-மாமரம்; ஒரு மாமரத்தடியில் இருக்கும் பெருமான் என்பது பொருள். இது தொண்டைநாட்டு முதல்பதி]

---

மறையவன் மறிகடல் நஞ்சை யுண்ட
இறையவன் வளநகர் இடை மருதே

## தாடகேச்சுரம்

குழந்தை, சிறுவன், குமரன், காமி, தந்தை, தாத்தா; அதன்பின், கை ஊன்றி எழுந்து, கண்கள் குழிவிழுந்து, கால்கள் தடுமாறி, ஊன்றுகோல் தாங்கி, பல்விழுந்து, மூச்சுத் திணறி முடிசாயும் வரை ஏமாந்து போகாதே!

"புரமூன்றும்
தீச்சரத்தால் செற்றான்; திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான் பாதமே ஏத்து"

## திருஒற்றியூரில் திரு

திருவொற்றியூர்க்குச் செல்வேன். அத்தலத்தையே அரணாகப் பெறுவேன். பசி எடுத்தால் பிட்சை. போதும் இந்த வாழ்வு!

"தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்(டு)
எஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்—நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின்"

[தஞ்சாக-அடைக்கலப் பொருளாக. தலையளித்திட்டு-முதன்மைபெற ஆண்டு. எஞ்சாமை-ஒரு குறையும் இல்லாமை.]

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
விற்றிருந்த செல்வம் விழையாதே—கூற்றுதைத்தான்
ஆடரவம் கச்சா அரைக்கசைத்த அம்மான்தன்
பாடரவம் கேட்ட பலன்"

பரமன் பாடலான வேதபாராயணத்தை, ஒரு பகல் சிரவணித்த பயனுக்கு ஈடாகுமா, பல ஊழி அரசாண்ட பேறு என்றும், அடிகள் வேறு ஓர் இடத்தில் விளக்கியுள்ளார்.

தொண்டை நாட்டு 20-ஆம் தலமான திருவொற்றியூரில் அமைதியுற்ற பட்டினத்தடிகள்,

---

முனிவரொடு அமரர்கள் முறைவணங்க
இனிதுறை வளநகர் இடை மருதே

"நச்சரவம் பூண்டானை நன்ருய்த் தொழுவதுவும்
இச்சையுடன் தானங் கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவதும் உண்பதுவும் வந்துதிருக் கோயிலிலே
தூங்குவதும் தானே சுகம்"

என்றது, இங்கு நினைவிற்கு வருகிறது அல்லவா!

## திருக்கடவூர்

காலபயம் தீர்ப்பது கடவூர். மருந்தை மறுத்து, இருமல் கனத்து, தொல்லைதரும் இறுதி தொடருமுன், கடவூர் மயானத்தைக் கதி என்று அடை!

"உய்யும் மருந்துஇ் இதனை உண்மினென உற்ருர்
கையைப் பிடித்(து) எதிரே காட்டியக்கால்—பைய
எழுந்(து) இருமி "யான் வேண்டேன்" என்னுமுன்,
நெஞ்சே!
செழுந்திரு மயானமே சேர்"

இப்படியே சோழநாடு, தொண்டைநாட்டுப் பதிகளைச் சிறக்கச்சென்றுசேவித்தஅடிகள், காளிவழிபட்டபதியான விக்ரமாதித்தன் ஆண்ட உஞ்சேனை மாகாளத்தையும் சென்று சேவித்தார்.

"காளையர்கள் ஈளையர்கள் ஆகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவழிந்து—சூளையர்கள்
ஓகாளம் செய்யாமுன் நெஞ்சே! உஞ்சேனை
மாகாளம் கைதொழுது வாழ்த்து"

[ஈளை-சயமும் இளைப்புமான நோய். பூளை-மிக மெல்லிய ஒருவகை மலர். சூளையர்கள்-நோய்க்காலத்தில் பக்கத்திலிருக்கும் பணியாளர். ஓகாளம்-வாந்தி எடுக்கும் அளவிற்கு அருவருப்பு.]

பயனுள அத்தலத்தும் இங்ஙனம் பாடியிருக்கிருர்.

## குறிப்பு

மனம் அறிந்ததை மறைக்கலாமா? உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறுவதா? உலக இதயத்தானை

---

அந்தணர் ஓத்தினே(டு) அரவம் ஓவா
எந்தைதன் வளநகர் இடைமருதே

உணர்வதுதான் அறம். அதை ஓதுவதுதான் முறை. வகையான அதைக் கேட்பதுதான் வாழ்வு.

நிலையாமையை நினைத்தால் அச்சம் நீளுகிறது. தூய இந்த அச்சந்தான், அறம்செய்யத் தூண்டுகின்றது.

நெஞ்சில் நஞ்சம், உதட்டில் உறவு, இனிய உத்தமரை இவ்வழியில் ஏய்த்தல்; இவர்களைப் பார்த்து, உடலை உருவாக்கிய ஐம்பூதங்களும், அட பைத்தியமே! உன்குட்டு ஒருநாள் உடையும். உன் பாபம் அன்று உன்னை உறுத்து நோக்கி, ஹஹ்ஹஹா ஹா என்று சினந்து பேய்ச்சிரிப்புச் சிரிக்கும். அதுதான் மரண தினம்.

இதை உணரச் சிறிது சிந்தனையே தேவை. "பாங்கரும் சிறப்பிற் பல்லாற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்தே" எனும் தொல்காப்பியப் புறத்திணையிற் சொல லப்பெற்ற செய்தியே இதற்கு இலக்கணம். ஊர்வெண்பா எனப் பெறும் இந்நூல், காஞ்சித் திணையைச் சேர்ந்தது. இருந்த வெண்பாக்கள் பல சிதைந்து, இப்போது இருப் பவை 24. 11-ம் திருமுறையில் உள்ள தெய்வப் பிரபந் தங்களுள் இதுவும் ஒன்று. அடிகள் 63 நாயன்மாருள் ஒருவர். இது ஒரு உபதேச நூல்.

---

# அண்ணமலையில் அருணகிரி விழா

நம் நாட்டின் விடுதலை நாளாகிய ஆகஸ்டு 15-ம் நாள், 1954ம் ஆண்டு வரையிலும் அரசியல் விழா நாளாக மட்டும் இருந்து வந்தது. 1955ல் திருவண்ணமலையில் பாசவிடுதலை யளிக்கும் அருணகிரிநாதர் விழா தொடங்கப் பட்டது. அதிலிருந்து தேச விடுதலை நாள், நம் பாச விடுதலைத் திரு நாளாக மாறிவிட்டது. அருணகிரி விழா அண்ணமலையில் ஏன்?

1. சந்தக் குயிலாகிய அருணகிரிநாதர் அவதரித்தது அண்ணமலையிலேயேயாம். 2. உடலுக்கு உரமளிப்பது

---

குடதிசை மதியதுசூடு சென்னிக்
கடவுள்தன் வளநகர் கடைமுடியே

உணவு. உயிருக்கு உரமளிப்பது இறை உணர்வு. இரண்டையுமே ஒருங்கே ஈவது அண்ணுமலை. தமிழ் நாட்டில் எந்த ஊரிலும் பிச்சை கேட்போர், 'அண்ணுமலைக்கு அரோஹரா' என்ற குரலெழுப்புவதைக் கேட்டிருக்கிறோம். எனவே உடலுக்கு உணவு தருவது அண்ணுமலை; உயிரை மறைக்கும் அக இருளோடு, உலகை மறைக்கும் புற இருளும் கால்வாங்கியோட 'தீபதரிசனம்' தருவது அண்ணுமலையன்றோ? ஆகவே உயிருக்கும் உறுதியூட்ட இறையுணர்வினை உதவும் தலமும் இதுவேயாம்.

இவ்வாறமைந்த சிறப்புக்களால் அருணகிரிவிழா திருவண்ணுமலையில் நிகழ்கிறது. ஒளிமயமான இத்தலத்தை ஒலி மயமாக்கிய பெருமை அருணகிரி நாதருக்கே உரியது. ஆகவே சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத் தலைமை அலுவலகத்தினரும், திருவண்ணுமலை ஈசான்யமடத்தினர் உள்ளிட்ட பேரன்பர்களது விழாச் செயற்குழுவினரும், அருணகிரிநாதர் திருவிழாவை வழக்கம் போல் இவ்வாண்டும் (15-8-58)ல் திருவண்ணுமலையில் இனிது நடத்தினர்.

## நான்காம் ஆண்டு விழா

சென்ற நாலைந்து மாதங்களாகவே ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. சென்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டு விழா மிக மிகச் சிறப்பாக இருந்தது. நவலோகமும் கைதொழும் நிசதேவன் முருகன். அவனது பக்தர்கள் பதினுலுகத்திலும் உள்ளனர் என்பார் அருணகிரியார். அதுபோல இவ்விழா அருணையன்பர்களோடு மட்டும் அமையவில்லை. சென்னையிலிருந்து 10 பஸ்களும், தொழுப்பேட்டிலிருந்து இரண்டு பஸ்களும், பரமன் பன்னிரு கைகளைப்போல் திருப்புகழ் அடியார்களை ஏற்றி வந்தன. பங்களூர் தவநெறிப் பாராயண தேவார திருப்புகழ்ச் சபை அமைப்பாளர் திரு. P. S. பரமசிவமும், திருப்புகழன்பர் திரு. குப்புசாமிமுதலியார் அவர்களது சலியா முயற்சியால் அவர்களது சபையினரும், வேறு சபைகளும் பஸ்ஸிலும் ரயிலிலும் வந்து விழாவைச் சிறப்பித்தனர். சேலம், திருச்சி

---

**ஆதர(வு) அருள்செய்த அடிகளவர்**
**காதல்செய் வளநகர் கடைமுடியே**

புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி, திருச்செந்தூர் முதலிய பல்வேறு இடங்களிலிருந்து சபைகள் வந்தன. இவ்விழாவில் 55 சபைகள் எண்ண முடிந்தது. அப்பாலும் அடி சார்ந்த திருத் தொண்டத் தொகையை யாரே கூற வல்லார்?

## விழா விளக்கம்

விழா 14-8-47-லிருந்தே தொடங்கிவிட்டது. இவ் விழாவின் அரிய நிகழ்ச்சிகள் இனிது நடைபெற அண்ணுமலையார் ஆலயத்தில் கோபுரத் திளையனுர் திருமுன்னே, ஆயிரமாயிரமாக ஆண்களும் பெண்களும் அமர்ந்து கேட்க ஒலி, ஒளியமைப்புகளுடன் அப்பர்காவணம் அமைக்கப்பட்டிருந்தது. ஆனுல் அங்கு வந்த அடியார்திரள் அப்பந்தலிலும் அடங்காமல், குளக்கரைகளிலும் கோபுரச் சுவர்களிலும், கோவிலின் பிராகாரங்களிலும் அமர்ந்திருந்தது கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது.

15-8-58 காலை முதல் அப்பர்காவணத்தில் அமைந்த அழகிய மேடையில் பல்வேறு பஜனை கோஷ்டியினர், அணியணியாக வந்து பத்து நிமிஷம் பஜனை செய்தனர். வந்த அன்பர்கள் அனைவரும் அத்தகைய பாராயணத்தி லீடு பட்டுத் தம்மையே மறந்திருந்தனர். பகல் ஒரு மணி ஆகியும் பஜனை நடந்த வண்ணம் இருந்தது.

விழாக்குழுவினர் மிகத்திறம்படச் செய்திருந்த ஒலியமைப்புக் காரணமாக விழாப் பந்தலில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும், மக்களுக்கு எவ்வித இடையூறின்றி அநுபவிக்க முடிந்தது.

'உண்டியும் உணவும் ஓயாமடத்தில்' என அமைத்திருந்தனர். ஓயா மடமும் உணவளிக்க ஓயவில்லை. உணவு கொண்ட அன்பர் குழுவும் ஓயவில்லை. சிலர் உணவையும் வேண்டாமல் நிகழ்ச்சியிலே நின்று விட்டனர்.

## பிற்பகல் நிகழ்ச்சி

மாலை 3 மணிக்குச் சென்று சொற்பொழிவுகள் தொடங்கின. ஸ்ரீ முருகதாஸ் அவர்கள், பேச்சாளர்கள்

---

ஒள் நுதல் உமையவள் ஓர் பாகம் வைத்த
கண்ணுதல் வளநகர்க் கடைமுடியே

பட்டியலை முறையே பேச வேண்டிய நேர அளவுடன் அறிவித்தார். தமக்கே உரிய நகைச்சுவை ததும்ப, மிக அரிய கருத்துக்களையும் மிக எளிதில் உணரும்படி பேசிய திருமுருக கிருபானந்தவாரியார் சொற்பொழிவு, எல்லோரையும் பக்தி வெள்ளத்தில் படியவைத்தது. அப்பரடிகள் போலவே அருள்பழுத்த திருவுருவினரான திருப்புகழ் மணி அவர்கள் பாடும் பணியான சிறப்பை மிக அழகுற விளக்கினார்கள். அதன்பிறகு இளவழகனார், வீர சிவ சுப்பிரமணியம், மயிலம் சிவ சுப்பிரமணியம், பவானி மு. கண்ணப்பர், திருமதி செண்பகவல்லியம்மையார் முதலியோரது அரிய சொற்பொழிவுகள் அருணகிரி நாதரையும், அவர் அருள் நூல்களையும், விழாவின் சிறப்பையும் விளக்குவனவா யிருந்தன. முடிவில் உயர்திரு முத்தைய செட்டியாரவர்கள் விழா தலக் குழுவினரின் சார்பில் நன்றி கூறினர். திரு. முத்துசுவாமி ஐயர், அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றம் எவ்வாறு அருணைக்கு வர நேர்ந்தது என்றும், விழா ஏற்பட்டதன் விளக்கமும் கூறி நன்றியறிவித்தார். ஸ்ரீ முருகதாஸ் அவர்களும் நன்றி தெரிவித்து திருப்புகழ்பாடி மங்களம் கூறினர். முடிந்ததும் அடியார்கள் பஜனை கோஷ்டிகளில் கலந்து கொண்டனர்

## இரவு பாராயணம்

மாலை 4 மணியிலிருந்தே சா. நா. சா. சாது சத்திரத்தி லிருந்து சபைகள் புறப்பட்டன. இரவு 8 அல்லது 9 மணிக்குள்ளேயே திருவண்ணுமலை நான்மாட வீதிகளிலும் அடியார் குழாங்கள் சபையுடன் திருவுலாப் போந்தனர். இச்சபைகளை மட்டும் ஒன்று விடாமல் கேட்கும் பேறு பெறும் ஒரு இசைவாணர், திருப்புகழ் எத்தனை ராகங்கள், எத்தனைவிதத் தாளங்கள் முதலியன அமைந்துள்ளன என்பதை உணரக் கூடும்.

காஞ்சி தேவார சபையினர் திரு. புண்ணியக்கோடியின் கோஷ்டியினர் தேவாரப்பண்களை மிக நூதன முறையில், கேட்டோர் சுவைக்குமாறு பாடினர். தற்போது செந்தூர் தேவஸ்தானத்து ஓதுவாமூர்த்திகளாயுள்ள திரு. நமசிவாயம்

---

நன்றுணர் ஞான சம்பந்தன் சொன்ன
இன்தமி ழிவைசொல இன்பம் ஆகுமே

அவர்களும், காளையார்கோவில் ஓதுவாரவர்களும் மிகச் சிறந்த இசைவிருந்து அளித்தனர். மதுரை ஆடி வீதி திருப்புகழ் சபையினர் திரு. தியாகராஜ ஐயர் அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் குழுவினருமாக தந்த திருப்புகழமுதம் இன்னமும் தெவிட்டாமல் இனிக்கிறது. திருத்தணித் திருப்புகழ்ச் சபையினரது பாராயணம் மிக விமரிசையாய் இருந்தது. பங்களூர் திருமதி. ரமணி அம்மையாரின் பஜனை போற்றத்தக்கது.

திருப்புகழைப் பாடிச் சிலரும், இசையமைத்து ஆடிச் சிலரும், உருகிச் சிலருமாகப் முருக பக்தியைப் பெருக்கினர். திருவண்ணுமலை நான்மாட வீதிகளில் எல்லாம் இரவு முழுதும் திருப்புகழ் இன்னிசை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியவண்ண மிருந்தது. அன்று திருவண்ணுமலையில் கானமயில் வீரன் திருப்புகழைக் கேட்ட செவிகள் வேறு கருப்புகழைக் கேட்க விரும்புமோ?

இவ்வளவு சபைகளினிடையில் ஸ்ரீ அருணகிரிநாதப் பெருமான் திருவீதி உற்சவமும் நிகழ்ந்தது. நாதசுரம் முன்னே, அருணகிரி நாதசுரம் பின்னே என அமைந்த காட்சியை என்றென்றும் மறக்க இயலாது.

இவ்வித காட்சியைக் கண்டும், கந்த கானத்தைக் கேட்டும் சென்ற அன்பர் குழாங்கள் இவ்விழாவிற்கு அடுத்த ஆண்டிலும் மறவாது வந்து கலந்துகொள்ள வேண்டுமென்று ஆர்வங்காட்டுவர் என்று சொல்லவும் வேண்டுமோ!

வாழ்க அருணகிரி! வளர்க திருக்கூட்டம்!

---

# சசிவன்னபோதம்

(கே. எஸ். சுந்தரமூர்த்தி)

[216-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பிறவிக்கடலைப்பற்றி குருநாதர் சொல்லக் கேட்ட சசிவன்னனுக்கு இன்னது செய்வது என்று

---

விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவன் இறைவிடம் திருவல்லமே

தெரியவில்லை. இனி எவ்வாறு இந்த பிறவிக் கடலை கடந்து செல்லுவோம். குருநாதர் கூறியருளிய இவை களைக் கேட்கும்பொழுதே உள்ளமானது சஞ்சலத்தால் துஞ்சி விடும்போல் இருக்கின்றது. இத்தனைக் காலமாய் இதைப்பற்றி சிந்தியாது நாட்களை அவமே கழித்துவிட் டேனே. இதுபற்றி ஏதும் கற்றதும் இல்லையே. காரிகை யார்களோடு ஆடியதால் நான் கற்றுக் கொண்டதும், பெற்றுக் கொண்டதும், முடிவிலாத துன்பங்களே. எந்த பொறிகளின் வழியே பொய்யொழுக்கத்தில் திளைத்து செயலழிந்து விட்டேனோ, அவைகள் இப்பொழுது தொடர்ந்து வந்து துயரஞ் செய்கின்றனவே. இனி யான் என்ன செய்யக்கூடும். எவ்வாறு இந்த பிறவிக்கடலை கடப்பேன்? இதற்குரிய மார்க்கந்தான் அறிந்திலனே என்று பெரிதும் புலம்பினான். முகம் வாட்டமுற்றான். அப்படியே மூர்ச்சையுற்றான். கொஞ்சம் நேரம் போனால் என்ன ஆவனோ என்று எண்ணும்படியான நிலையை அடையலுற்றான்.

சசிவன்னன் நின்ற நிலையும், அவனது நேர்மையும் கண்டு மானந்திபராயணரின் மனமானது இளகியது. அவனுக்கு நல்ல வழியை நல்க திருவுள்ளம் கொண்டார். அந்த அருள் மொழியாளர் அவனது சோர்வெல்லாம் தீரு மாறு கூறுவார்.

அன்பனே! வருந்தற்க. உனது நிலைகாண என்மனம் மருள்கின்றது. இந்த பிறவிக்கடலை எப்படி கடக்கப் போகிறோம் என்றுதானே வருந்துகின்றாய். இதை கடப்பது சுலபமே. பிறவிக்கடலை கடந்துசெல்ல நல்ல தெப்பம் (தோணி) இருக்கின்றது. உணர்வெனும் தோணிபற்றினால் இதனை வெகு விரைவிலேயே கடந்து விடலாம் என்று கூறியருளினார்.

. சசிவன்னன்: குருநாதா! இந்த பிறவிக்கடலை கடக்க தோணி இருக்கிறதா? உணர்வாகிய தோணியில் ஏறிக் கொண்டால் இதனைக் கடந்து விடலாமோ? சிறியேனை வாழ்விக்க எண்ணிய தங்களின் அன்பை இவ்வேழை

எவ்வாறு அறிவேன்? இனி பிறவாத வாழ்வு பெற்றவன் ஆனேன் என்று மகிழ்ந்தான். சூத்தாடினன். மீண்டும் மீண்டும் குருநாதரைப் பணிந்து நின்றான். பிறவிக்கடலைக் கடக்கும் பெற்றியை அருளவேண்டுமென்று வேண்டினன்.

குருநாதர்: சசிவன்ன! உண்மையறிந்த பெரியோர்கள் அறிவை இருவகையாக பிரித்து இருக்கின்றனர். ஒன்று அபர அறிவாகும். மற்றொன்று பர அறிவாகும்; இந்த இரண்டின் துணைபற்றியே அறிய வேண்டிய பொருளை அறியக்கூடும்.

சசிவன்னன்: குருநாதா! அறிவு இருவகைப்படும் என்று கூறி அதன் விபரமும் கூறி யருளினீர்கள். அதனுடைய பயன்களை அறிந்துகொள்ள பெரிதும் விழைகின்றேன். அதை தாங்கள் கூறியருளுவீர்.

குருநாதர்: சசிவன்ன! கற்கவேண்டிய நூல்களைக் கற்பதால் உண்டாவது அபர அறிவாகும்; குருதேவரின் உபதேசத்தை பெறவேண்டும். சீவனது ஒடுங்க வேண்டும். பூத ஒடுக்கமும் வேண்டும் என்று கூறுவது அபர அறிவாகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்களின் கூட்டுறவையே சீவ வளர்ச்சியென்று கூறுகின்றேன். நிலையில்லாத பொருளையே நிலையுடையவை யென்று கருதி அவைகளைப் பெற அபிமானித்து திரிகின்றன. பந்தத்திற்கு இந்த சிந்தனை விரிவே காரணமாகிறது. இதனால் உள்ளமானது மயக்கத்தை அடைகின்றது. இதை முதலில் ஒழித்துக் கட்ட வேண்டும். இதையே சீவ ஒடுக்கம் என்று அறிந்துகொள். சைவ சித்தாந்திகள் இதற்குப் பசுஞானம் என்று கூறுவர். அதாவது உயிரைப் பொருளென அறிவது என்று பொருளாகும்,

இன்னொன்று உலகத்தை அறியும் அறிவு. இதற்கு பாசஞானம் என்று கூறுவர். பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாகியதே இந்த உலகம்: அவற்றின் பரிணாமமே இந்தத் தூல உடம்பு. அவற்றின் சூக்குமம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவைகளாகும். இவற்றின்

வழியே பிறவிக்கு ஏதுவான செயலனைத்தும் செய்துவிடுகிறோம். இத்தனைக்கும் மூலமாக இருப்பது பஞ்சபூதங்கள் என்று இப்பொழுது தெரிந்துகொண் டிருப்பாய். ஆகையால் இந்தப் பஞ்சபூதங்களின் ஒடுக்கமும் தேவையாகிறது; இதைப்பற்றி சாஸ்திரம் படிப்பதாலும், குருநாதருடைய உபதேச வழியாலும் அறிந்து கொண்டதற்கு அபர அறிவென்று பெயராகும். இதன் உண்மையைத் தெரிந்து சீவ ஒடுக்கத்தாலும் பூத ஒடுக்கத்தாலும் அனுபவத்தில் பெறக்கூடிய அறிவுக்கு பர அறிவு என்று பெயராகும்.

"சீவனொடுக்கம் பூதவொடுக்கம் தேறவுதிக்கும்— பரஞானம் (அருணகிரிநாதர்).

சசிவன்னன்; குருநாதா! இப்பொழுது தாங்கள் கூறியருளிய விஷயங்களினால் பர; அபர அறிவின் தன்மைகளை அறிந்தேன். இனி, இதனால் இங்கே பெறவேண்டியது என்ன இருக்கிறது? அதற்கு இவ்வெளியேன் செய்ய வேண்டியது உளதோ?

குருநாதர்: சசிவன்னா! இவ்விரண்டு வகையான அறிவும் தேவையானவைகளே. மெய்ஞ்ஞானம் அடைய வேண்டும் என்ற விருப்பமும், அதைப்பற்றிய கேள்வி ஞானமும், அதனை அறிந்துகொண்ட பிறகு தெளிவு கொண்டு, விடக்கூடிய இச்சைகளை விடவும், இந்த இச்சைக்குக் காரணமான பொய்யறிவைப் போக்கியும், முத்திப் பேறு கிடைக்கவேண்டும் என்று பெரிய வேட்கையும் அடைவதற்கு இந்த அபர அறிவே துணைசெய்கிறது. சாஸ்திர ஞானமென்றும், குரு உபதேசமென்றும், சொந்த அனுபவம் என்றும் இப்பொழுது நினைத்துக் கொண்டிருக்கும் அந்தப் பொய் அனுபவமும் இல்லாதுபோனால், மெய்யறிவை என்றைக்கு அடையமுடியும்? ஆனால் இத்தனை விவகாரங்கள் அறிந்தும் இவற்றின் உள்நாடியாக இருக்கும் மூலப்பொருளை ஒரு சிறிதும் அறியாதுபோனால், இதனால் யாது பிரயோசனம் உண்டாகும்.

சசிவன்னன்: குருநாதா! இப்பொழுது தாங்கள் கூறியவைகளைக்கொண்டே இந்தப் பர அறிவைபெற்று விடலா

மல்லவா? இதற்கு வேறு துணையும் இருந்தால்தான் பெற முடியுமோ? இதனை நன்ருக விளக்கி யருளுவீர்.

குருநாதர்: சசிவன்ளு! நன்றுகேட்டாய். பர அறிவைப் பெறுவதற்கு இவைகளே போதுமானவைகள் அல்ல. அதோ! அந்த மரநிழலிலே சின்னஞ் சிறிய பாலர்கள்கூடி என்ன செய்கிருர்கள் என்பதனைப் பார்த்தனையா? தனது பிஞ்சுக் கரங்களால் மணல்களைத் திரட்டி திட்டாக சிறிய கோபுரம்போல் செய்கின்றனர். சில குழந்தைகள் அதி லிருந்து சிறிது சிறிதாக மணல்களை ஒரு சதுரம்போல் பிரித்து ஒவ்வொரு அங்கணமாகச்செய்து முடித்து, முடிவில் ஒருசிறிய வீடே கட்டிவிட்டனர்; அதைப்பார்த்துப் பார்த்து பெருமகிழ்ச்சியடைகின்றனர். ஆனல் சசிவன்ளு! இந்த அழகிய வீட்டில் வசிக்க முடியுமா? அவர்கள் எப்பொழு தாவது சிந்திப்பது உண்டா? நாம் அதனைப் பார்க்கிருேம்; அனுபவத்தால் உண்மையைத் தெரிந்தும் அவர்களோடு சேர்ந்து நாமும் சந்தோஷம் அடைகின்ருேம். இந்த சிறு பிள்ளைகளின் முயற்சியானது, கலைஞானங்களைப் பற்றிய தற்கும் பொருந்தும்.

அளவற்ற நூல்களை ஓதியும் உணர்ந்தும் பிறர்களுக்கு உரைத்தும் விடுவதால் உண்மை அறிவைப் பெற்றது ஆகுமோ? ஆகாது சசிவன்ளு! முற்கூறிய சிறுவர்கள் பிற் காலத்தில் வாழ்க்கையில் உண்மை வீடுகளையும், மனைவி யையும், குழந்தைகளையும் பொருள்களையும் உடையவர்கள் ஆகின்றனர். அப்பொழுது உடைந்த ஓடுகளையெடுத்துச் சென்று, இந்தக் காசுக்கு அந்த பொருளைக் கொடுப்பாய் என்று எவராவது கேட்கமுடியுமா? கேட்டால் அவர் களுக்குப் புத்தி தெளிவு இல்லையென்றுதானே உலகம் கூறும். அதைப் போன்றதுதான் இந்த கலைஞானத்தால் அறியவிரும்பும் உண்மை அறிவும். ஓடு காசாகாது. ஆனல் உண்மையில் காசு இருக்கிறது. கையில் உள்ள மரப் பாச்சி மனைவியாகாது. ஆனல் உண்மையில் மனைவி வரத் தானே செய்வாள். இந்தக் கலைஞானத்தால் பெறமுடியாத அந்த மெய்யறிவை அனுபவ அறிவால் அடையக்கூடும். உண்மை அனுபவம் இருக்குமேல் அதுவும் கிட்டும்.

---

"சந்திரன் ஒடுங்கி நிற்ப தபனனே சரிக்குமாறு
பந்தனை யிலாதான் யோகத் துயில்வர பள்ளி கொண்டான்"

என்று வில்லிபுத்தூர் ஆழ்வார் கூறுகின்றார். பந்தம் ஒழிந்துபோனால் தானே யாவும் பெறலாம். சித்தத்தை உருக்கிச் சிவம் எம்பெருமான் என்று கூற வேண்டாமா? சிந்தையிடத்திலே அப்பெருமானைக் காண வேண்டுமென்ற பித்தானது பெருக வேண்டாமா? உலக எண்ணங்களை ஒழித்து அவனது பெருங்கருணைத் திறத்தையே சிந்தித்து வந்திக்க வேண்டாமா? இவ்வண்ணம் அப்பெருமான் உள்ளத்தின்கண் எழுந்தருளியதாகப் பாவனைசெய்து ஆனந்தம் அடையவேண்டாமா? அத்தன் என்றும், ஆனந்தன் என்றும், அமுதன் என்றும் தித்திக்க பேசுவென்று மணிவாசகர் கூறுகின்றாரே! தென்னா என்னா முன்னம் தீ சேர் மெழுகாக உருகு என்று அவர்தானே கூறியருளினார். இத்தனை வழிகளில் யாதாவது ஒன்றை குருநாதரின் அருளால் பின்பற்றினால் அந்தப் பர அறிவைப் பெறலாமே.

"மழுமான் கரத்தனை, மால்விடையானை, மனத்திலுன்னி
விழியால் புனல்சிந்தி விம்மியழ நன்மை வேண்டுமென்றே"

என்று முற்றுந் துறந்தவர் கூறியதை உணர்ந்து முறையாகப் பயின்றால், தத்துவ ஞானமாகிய பர அறிவு எளிதிலே கைகூடித் தானே வரும்.

சசிவன்னன்: குருநாதா! எனக்குத்தான் இலக்கணம் வருமே? இசைப்பயிற்சியும் பெற்றிருக்கின்றேனே. நாடகத்தையும் நடித்துப் பார்த்தாகிவிட்டதே; இந்த அறிவைப் பெற்றிருக்கும்போது, எனக்கு இந்தப் பர ஞானம் சித்தியாதோ?

குருநாதர்: சசிவன்னா! பேஷ் நன்றாகக் கேட்டாய். இயலறிவாலும், இசையறிவாலும், இனவறிவாலும் பர அறிவை அடைய முடியாதாவென்று தானே கருதுகின்றனை. முடியாதப்பா; முடியாது; இது அதற்கு பிரயோசனப்படாது, உலக மக்களின் "சபாஷ்," பட்டத்தை வேண்டுமானால் பெறலாம்; ஆனால் தனக்கு வேறாக இருக்கும் பொருளைத்தான் இதனால் அறியக்கூடுமேயன்றி

தன்னைப்பற்றி அறியும் அறிவு இதற்கு கிடையாது. பொதுவாக இந்த அறிவு இருப்பது நல்லதுதான். ஆனல் ஆன்மாவைப்பற்றி அறியும் ஆற்றல் இல்லாதபோது இதை தகுதியுடையதாக எப்படிக் கருதமுடியும் "அறிவை அறிவது பொருளென்றும்", அறிவை அறிபவர் இன்பந்தனை யென்றும் அருணகிரிநாதர் கூறியிருப்பதை அறியாயோ? ஆகையால் இந்த முத்தமிழால் பிரயோசனம் ஏதும் இல்லை. இதுவும் மெய்யறிவு ஆகாது. இதை நீ அறிவாய்.

(தொடரும்.)

---

# உபநிஷதங்களின் உள்ளொளி

(ஸ்ரீமதி விஜயலட்சுமி)

(2. கேனோபநிஷதம்)

ஆத்மாவைப் பற்றி பூரணமான விளக்கத்தை குருதேவர் சீடனுக்கு விபரமாக முதல் காண்டத்தில் கூறினர். அவர் விரிவாகக் கூறிய உபதேசங்களிலிருந்து ஓரளவு ஆத்மாவைப்பற்றி அறிந்தான் சீடன். வாக்கின் மூலம் அவ்வஸ்துவை எவ்வளவு தூரம் விளக்கக் கூடுமோ அத்தனை விளக்கமாக முன்பே குருதேவர் கூறிவிட்டார். சிஷ்யனது அறிவும் அதை நன்கு கிரகித்துக் கொண்டது. ஆனல் ஆத்மா அறிவால் மாத்திரம் அறியப்படுவது அல்லவே! அதை உணர்வால்தானே உணர வேண்டும். எனவே சீடன்தான் அவ்வாத்மாவை அறிந்து விட்டதாக எண்ணக் கூடாது என்பதற்காக இரண்டாவது காண்டத்தின் முதல் மந்திரத்தில் குருநாதர் சீடனின் கூறிய அறிவுக்கு முதலில் சாட்டையடி தருகிறர்.

**ஆத்மாவை நீ அறியவில்லை:** "சீடா! நீ ஆத்மாவை அறிந்துவிட்டதாக எண்ணினல், அவ்வறிவு மிகச் சிறியதேயாகும். நீ பெரும் வஸ்துவான ஆத்மாவின் அல்பமான பகுதியையே அறிந்திருக்கிறய். எனவே மேலும் ஆத்ம விசாரம் செய்"—என்றர்.

---

**குற்றமில் செந்தமிழ் கூற வல்லார்
பற்றுவர் ஈசன்பொற் பாதங்களே**

முந்தைய காண்டத்தில் 8 மந்திரங்களில் இதற்குமேல் ஆத்ம விளக்கம் யாராலும் தரமுடியாது எனச் சொல்லும் வகையில் விளக்கமாகப் பகர்ந்த குருநாதர், 'நீ பெற்றிருக்கும் ஆத்ம அறிவு மிக அல்பமானது'என்று சீடனைநோக்கிக் கூறுவது விந்தையாக இருக்கிறதல்லவா?

வார்த்தை அல்லது சொற்கள் எல்லை உடையவை. அவற்றைக் கொண்டு அநித்யமான, அந்தமுள்ள பொருட்களை விளக்க முடியுமே யல்லாது கரையற்ற கடவுட் தத்துவத்தை விளக்க முடியாது. ஏனெனில் அவ்வார்த்தையே அவ்வாத்ம சக்தியினால்தானே வெளிவருகிறது. தன்னைத்தானே எப்படி எடுத்துக் காட்டுவது? ஆத்மாவை அறிய வேண்டுமானால் அதுவாக ஆக வேண்டும். அதனோடு ஒன்ற வேண்டும். அப்போதுதான் அதன் தன்மையை உணர முடியும். ஆனால் அப்படி உணர்ந்தவர்களால் அதனை விளக்கிச் சொல்ல முடியாது. நெருப்பு பிற பொருட்களை எரிக்கும் சக்தி வாய்ந்தது. ஆனால் நெருப்பால் நெருப்பையே எரிக்க முடியுமா? வார்த்தைகளால் விளக்க முடியாத அவ்வஸ்துவை ஓரளவு வார்த்தையால்கூறினேன். அதைக் கேட்டு இவ்வளவுதான் ஆத்மவஸ்துவின் தன்மை என்று அளவிட முடியாது. நீ கேட்டிருப்பது ஒரு சிறிதளவே. அதை முழுதும் அறிய விரும்பினால் அனுபவத்தால் கண்டிடு என்று ஈண்டு மறை முகமாக குரு ஆக்ஞாபிக்கிறார். அதற்கு வழி என்ன? திருமூலர் இதற்குப் பதிலளிக்கிறார்:—

உரையற்ற தொன்றை உரை செய்யும் ஊமர்காள்
கரையற்றை தொன்றைக் கரை காணலாமோ
திரையற்ற நீர்போல் சித்தம் தெளிவார்க்குப்
புரையற்றிருந்தான் புரிசடை யோனே

ஆத்மாவைப்பற்றி எத்தனை கேட்டாலும் எவ்வளவு கற்றாலும், உள்முகமாக மனத்தைத் திருப்பி விசாரம் செய்யும் ஆராய்ச்சியாளர்க்கே அதன் தன்மைப் புலப்படும். ஆத்மாவைப் பற்றி ஓரளவு கேட்டு அதை அனுபவத்தில் பயிலாதவர்கள் தேகம், மனம், புத்தி, அகங்காரம் போன்றவற்றை ஆத்மா என்று தவறாக எண்ணிவிடக் கூடும்.

---

உருவுடையாள் உமையாளும் தானும்
மருவிய வளநகர் மால்பேறே

ஈண்டு இந்திரனும் விரோசனனும் பிரஜாபதியிடம் பிரம்ம வித்யை கற்ற கதை ஞாபகம் வருகிறதல்லவா. விரோசனன் சில ஆண்டுகள் பிரஜாபதியிடம் பாடம் கேட்டு தேகமே ஆத்மா எனும் எண்ணத்துடன் வீடு திரும்பி விட்டான். இந்திரன் பிரஜாபதியிடம் 101 ஆண்டுகள் தங்கி கடும் தவத்தால் அக அழுக்குகளை அகற்றி, குறைகளை மாற்றி, திடமான நம்பிக்கையுடனும் பிரம்மச்சரியத்துடனும் வாழ்ந்து, மும்முறை பிரம்ம வித்யை போதிக்கப்பட்ட போதிலும் நான்காம் முறையே பிரம்ம சாக்ஷாத்காரம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

குருநாதர் இங்கு சீடனை நோக்கி, "இதுவரை நீ கேட்டது போதும். இனி ஸ்ரவண மனனத்திற்குப் பின்னர் ஏற வேண்டிய நிதித்யாசனப் படியிலேறு என்று கூறுகிறார். புத்தி சத்தியால் பெற்ற அறிவு (intellectual knowledge) உனக்குக் கிட்டியுள்ளது. இனி நீ உணர்ச்சி பூர்வமாக அருள் நிறைந்த அக உணர்வால் பெறும் அனுபவ அறிவை (intutive knowledge) தேடிடு" என்கிறார்.

சீடனும் அதன்படியே தனித்துச் சென்று தியானத்தில் அமர்ந்து ஆத்ம விசாரத்தில் ஈடுபடுகிறான். மனிதன் தன்னைத்தான் பார்க்க முடியாது. பிற பொருட்களைப் பார்க்கும் கண்ணால் தன்னையே பார்த்துக் கொள்ள முடியாது. அவ்வாறு பார்க்க விரும்பினால் ஒரு கண்ணாடியில் தன் பிரதி பிம்பத்தைக் காண முடியும். அதுபோல ஆத்மாவைக் காண வேண்டுமானால் சுத்தமான மனம் எனும் கண்ணாடியில் அதன் பிரதி பிம்பத்தைப் பார்க்க முடியும். பக்தியுடனும் தியானத்திலமர்ந்தான். ஓரளவு ஆத்மாவைக் கண்ட உணர்ச்சி அவனுக்கு ஏற்படுகிறது.

### விந்தையான உத்தரம்

குருவிடம் பதிலளிக்க வருகிறான் சீடன். ஆத்ம வஸ்துவை தான் முழுதும் கண்டுணர்ந்து விட்டதாக அவனால் சொல்ல முடியவில்லை. குருவைப் பணிந்து பகருகிறான்.

---

கலைநவின்றான் கயிலாயம் என்னும்
மலையவன் வளநகர் மால்பேறே

"நான் அவ்வாத்மாவைப் பூரணமாகக் கண்டுவிட்டேன் என்றும் கூறமுடியாது. காணவில்லை என்றும் கூற முடியாது. இங்கு (தங்களருகில் இருந்து பாடம் கேட்கும்) எங்களுள் அதனை அறிந்தவன் அறிந்தவனே. அறியாதவன் அறியாதவனே—.

"உளன் அல்லன்—இல்லையல்லன்" என்று பெரியார் கூறியது போலிருக்கிறதல்லவா இவ்விடை! ஆம்-அவன் ஆத்மாவைப் பூரணமாகக் கண்டுவிட்டதாக எப்படிக் கூறுவான்—தன்னை மறந்து பிரக்ஞான கனமான அப்பர வஸ்துடன் கலந்துவிடுகிறான். அவ்வாறு உணர்ந்தவன் 'எல்லாம் பிரம்மம்' 'ஸர்வம் கல்பிதம் பிரம்ம' என்றிருப்பான். இவ்வனுபவம் அவனுக்கு சமாதியில் கிட்டுகிறது. சமாதியில் கிட்டிய அவ்வனுபவம் அவனுள்ளத்தில் நிறைவைத் தருமேயல்லாது அதை நான் கண்டுவிட்டேன் என்று மார் தட்டச் செய்யாது. எனவேதான் இங்கு சீடன் அடக்கத்துடன், நான் அதனை முழுதும் கண்டுவிட்டேன் என்றும் கூறமுடியாது. ஆனால் காணவில்லை என்றும் கூறமுடியாது என்கிறான். குருநாதன் "நீ அவ்வாத்மாவை அறிந்திருப்பதாகக் கூறினால் பூரணமாக அறிந்துவிட்டேன் என்று ஏன் கூறக் கூடாது? அல்லது பூரணமாக அறியவில்லை என்பதற்குப் பதிலாக அறியவேயில்லை என்று கூறிவிடுவது தானே" என்று கேட்கிறார் போலும். அதற்கு உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும் இரண்டாவது வாக்கியத்தை உரைக்கிறான் சீடன். "இங்கு எம்முள் அதனை அறிந்தவன் அறிந்தவனாவான்; அறியாதவன் அறியாதவனாவானே."

உலகப் பொருட்களைப் பார்ப்பது போன்று ஆத்மாவைக் காண முடியாது. ஆனால் அதுவே எல்லா நிலைகளுக்கும் சாட்சியாகவும் அனைத்திற்கும் ஆதாரமாகவும் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. மனம், புத்தி, அகங்காரம் இவை அற்றுப் போன இடத்தில் ஆத்ம அனுபவம் பெற்றவனே அதனை அறிந்தவனாகிறான். அவ்வாறு அறியாதவன் அறியாதவனே. ஆத்மாவே என்னுள் என்றும் சாக்ஷியாக உள்ளது. அதுவே புறத்தில் எல்லாமாக இருக்கிறது என்பதை நான் அறிகிறேன். ஆனால்

---

அதன் வடிவம் இதுதான் என்று என்ருல் சொல்ல முடியாது என்று பொருள் படும்படி அமைகிறது சீடனின் விசித்திரமான உத்தரம்! சீடனின் கருத்துக்கு ஏற்ப திருமூலப் பெருமான் பேசுகிருர்.

உள்ளத்தும் உள்ளான் புறத்துள்ளான் என்பார்க்கு
உள்ளத்தும் உள்ளான் புறத்துள்ளான் எம்மிறை
உள்ளத்தும் இல்லே புறத்தில்லே என்பார்க்கு
உள்ளத்தும் இல்லே புறத்தில்லே தானே!'

குரு மேலும் பேசுகிருர்: சீடன் தகுந்த பக்குவம் வாய்ந்த அதிகாரி என்பதை அறிந்த குரு அகமகிழ்ச்சி அடைகிருர். இனி ஆத்ம சாக்ஷாத்காரம் அடைந்தவன் எவன் என்பதை எடுத்துரைக்கிருர்.

முகத்துக்கண் கொண்டு நோக்கும் மூடர்கள்! அகத்துக்கண் கொண்டு காணுதலே ஆனந்தம்! வெறும் வாசா ஞானிகளின் பகட்டுப் போலி ப்ரம்ம சாக்ஷாத்காரத்தைக் கண்டு ஏமாருதீர்கள்!' என்று கூறுவது போலிருக்கிறது குருவின் வாக்கியம்.

''நான் அதனே அறிந்துவிட்டேன் என்று எண்ணுபவன் அதனே அறிந்தவனில்லே. நான் அதனே அறியவில்லே என்று நினேப்பவனே அதனே உணர்ந்தவனுகிருன். நான் கண்டு கொண்டேன் என்பவன் காணுதவன். காணவில்லே என்பவனே கண்டவனும்.''

கண்டவர் விண்டிலர்—விண்டவர் கண்டிலர்' என்ற இது, ''பிரம்மா (ஆத்மா) ஒன்றே எல்லா நிலேகளிலும் (அவஸ்தைகளிலும்) சாக்ஷியாயிருக்கிறது என்பதை உணருபவன் அமரத்வம் அடைகிருன். ஆத்மாவால் வீர்யத்தையும் (பலத்தையும்,) வித்யையால் (அவ்வறிவால்) அம்ருதத்வத்தையும் அவன் பெறுகிருன்.

பூரண அறிவுஸ்வரூபமான (ப்ரக்ஞான கனமான) ஆத்மாவே மனிதனது எல்லா அவஸ்தைகளிலும் சாக்ஷியாயிருக்கிறது ஆனுல் மனிதன் தன்னே ஆத்மாவிலிருந்து மனத்தைக் கொண்டு பிரித்துக்கொண்டு, 'நான்' என்பது யார் என்றே உணராது உலகில் எல்லா அவஸ்தைகளிலும்

---

ஆதியான் ஆகிய அண்ணல் எங்கள்
மாதிதன் வளநகர் மால்பேறே

(நிலைகளிலும்) வாழ்கிறான். அவன் தனது மனத்தை மாய்த்து நான் என்பது ஆத்மாவே—அதுவே எனது இந்திரியங்கள் வாயிலாகவும், மனத்தின் மூலமாகவும், அறிவாகவும், 'நான்' எனும் அகங்காரமாகவும் இருந்து, அவற்றிற்கு பின்னாலும் இருந்து இயங்குகிறது என்பதை உணர்ந்து, அவ்வாத்மாவோடு மனத்தை இணைத்துவிட வேண்டும். அப்படி இணைத்தால் எல்லா நிலைகளிலும், எந்தச் சூழ்நிலையிலும் அவன் எதனாலும் பாதிக்கப்படாதவனாக இருக்கிறான். சூரியனுக்கு இரவென்பதோ பகலென்பதோ கிடையாது. அது எப்போதும் ஒளியுடனேயே இருக்கிறது. அதுபோல ஆத்மாவும் எப்போதும் நிரந்தர ஆனந்தமும், பூரண அமைதியும் குறையாத அறிவும் கொண்ட ஆனந்தவடிவாக இருக்கிறது என்பதை உணர்கிறான். அவ்வாத்மாவுடன் அவன் கலந்து ஒன்றாகிவிடுகிறான். இதுகாறும் ஜீவனாயிருந்த அவனுள் சிவமணம் பூத்து விடுகிறது. 'அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால், உப்பெனப் பேர்பெற்று உருச்செய்த அவ்வுரு, அப்பினிற்கூடிய தொன்றாகு மாறுபோல், செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே—(திருமூலர்)—என்றபடி. அவன் தேச கால பதார்த்தங்களாலும், பிறப்பிறப்பாலும், சுகதுக்கங்களாலும் பாதிக்கப்படாத ஆத்ம வீரனாகிறான். இத்தீரத்தன்மை-வீர்யம்-அவனுக்கு ஆத்மாவிலேதான் கிட்டுகிறது. இவ்வாத்ம வித்யையால்தான் அவன் அமரத்வமும் அடைகிறான்.

**ஆத்ம சாக்ஷாத்காரத்தின் பயன்**

"இஹ சேத³வேதீ³த³த² ஸத்யமஸ்தி நசேதி³
ஹாவேதீ³ன் மஹதீ விநஷ்டிஹீ
பூ⁴தேஷு பூ⁴தேஷு விசித்யதீ⁴ரா: ப்ரேத்யாஸ்மாத்
லோகாத அம்ருதாபவந்தி"

இங்கு, இவ்வுலகில் அவ்வாத்மாவை அறிந்தவன் மனித வாழ்க்கையின் இறுதியாம் லக்ஷ்யத்தை அடைந்தவனாகிறான். (மனிதப்பிறவி எடுத்தும்) அவ்வாறறியாதவன் பெரும் நஷ்டமுற்றவனாகிறான். ஆத்மாவை எங்கும் எல்லா

---

வஸ்துக்களிலும் கண்ட அறிவுடையோர் (விஷயபரமான) இந்திரியபரமான வாழ்க்கையை விடுத்து அமரத்வத்தை அடைகின்றனர்.

"கற்றீண்டு கண்டார் மெய்ப்பொருள் தலைப்படுவர் மற்றீண்டு வாராநெறி"—"தவஞ்செய்வார் தம் கருமம் செய்வார் மற்றல்லார் அவஞ்செய்வார் ஆசையுள்பட்டு" என்று வள்ளுவர் பெருமான் பகர்ந்தபடி இங்குக் குருநாதன் கூறுகிறார். ஆத்ம அறிவைப்பெற முயலுபவரே உண்மை வித்யார்த்திகளாவர், அவ்வறிவைப் பெற்றவரே உண்மையில் கற்றறிந்த அறிஞராவர். ஆத்மச் செல்வத்தைத் தேடுபவர்கள், அதற்கான செயலில் ஈடுபடுபவரே தம் கருமம் செய்பவரென அழைக்கப்படுகின்றனர். அத்தகையவரே மனிதராய் பிறந்ததன் பயனைப் பூரணமாய்ப் பெற்றவராவர். ஏனையோரெல்லாம் அதனை வீணாக்கி, விரயமாக்கி, பெரும் நஷ்டத்திற்குள்ளாகி, கஷ்டத்தைத் தேடிக் கொண்டவர்களாவர்.

'நான்' 'எனது' எனும் பற்றற்று எல்லாவற்றையும் ஆத்மாவாகக் கண்டு, ஆத்ம நோக்கே அடைய முயன்று அதனைப் பெற்றவர்கள் இவ்வுலகில் வாழுங்கால் அமரத்வம் பெற்றவர்களாகின்றனர். அவர்களே ஜீவதசையிலேயே முக்திபெற்ற ஜீவன் முக்தர்கள் என்றும், உறுதி பெற்ற அறிவுகொண்ட ஸ்திதப்ரக்ஞர்கள் என்றும் மேலோரால் அழைக்கப்படுகின்றனர். அத்தகையவர்கள் தமது கர்ம சரீரத்தை இங்கு உகுத்த பின்னர் மீண்டும் பிறப்பற்றவராகி, எங்கிருந்து இவ்வாத்ம ஜோதி தோன்றியதோ, எச்சக்தி இங்கு எல்லாமாயிருந்து அனைத்தையும் ஆக்கி, அனைத்தையும் ஆட்டி, அனைத்தையும் தன்னுள் ஸ்வீகரித்துக் கொள்ளுகிறதோ அப்பரம்பொருள் அல்லது பரமாத்மாவுடன் இரண்டறக் கலக்கின்றனர் என்று இவ்விரண்டாம் காண்டத்தை முடிக்கிறார். ஸ்ரீ குருநாதர்.

குருநாதரின் அருள் வாக்கியங்களைக் கேட்டு, அதன் மூலம் அவரைப்பணியும் நாமெல்லாம் அவர் தம் சீடனை எங்நிலையில் இருக்க விரும்புகிறாரோ அங்நிலைக்கு நம்மை உயர்த்திக்கொள்ள முயல்வோமாக!

---

முளைத்தவெண் மதியினோ(டு) அரவம் சென்னி
வளைத்தவன் வளநகர் மால்பேறே

# "முனிவர் காட்டிய முதல்வன்" (4)

(சி. குமாரஸ்வாமி)

"இதுவரை நாம் பார்த்தவர்களையும், இடங்களையும் சுருக்கமாகச் சொல்,"

"அப்படியே ஆகட்டும் சுவாமி."

"முதலாவதாக, கீழ் கடற்கரையில் சூரியோதயத்தைப் பார்த்தோம். பிறகு செங்கடம்ப மரங்களும், செங்காந் தள் மலர்களும், ஓங்கி உயர்ந்த மூங்கில் மரங்களும் நிறைந்த காட்டையும், மலைச்சாரல் சோலையையும், அச் சோலையிலே ஆடிப்பாடி மகிழும் அழகிய தெய்வமகளிரை யும், போர்க்களத்திலே பிணங்களைத் தின்றுவிட்டுக் கூத்தாடும் கொடிய பேயையும், மதுரைமாநகரில் சொக்க நாதப் பெருமானையும், லக்ஷ்மீகடாக்ஷம் பொருந்திய பெரிய கடை வீதிகளையும் பார்த்துவிட்டுத் திருப்பரங்குன்றிலே குமரனைக் கண்டோம்.

இரண்டாவதாக, திருச்சீரலைவாயிலே யானைமீது, ஆறுமுகமும் பன்னிரு கைகளையும் கொண்டு மணிமுடிப் பெருமானுகக் காட்சி தருவதைக் கண்டோம்.

மூன்ருவதாக, திருவாவினன்குடியிலே, தவத்திலும் அறிவிலும் சிறந்த முனிவர்களும், யாழிலே பயிற்சிபெற்ற கந்தருவரும், குற்றமற்ற கந்தருவ மகளிரும், கருடக் கொடியையுடைய திருமாலும், இடபக்கொடியையுடைய சிவபிரானும், ஆயிரங்கண்ணுகிய தேவர் தலைவனும், (இந்திரனும்) மற்றும் முப்பத்து முக்கோடி தேவர்களும், தெய்வயானையம்மையுடன் அமர்ந்து அருள்புரியும் முதல் வனைத் துதிப்பதைக் கண்டோம்."

இப்போது நாம் நமது முதல்வன் விரும்பித் தங்கி இருக்கும் நான்காவது இடத்துக்கு வந்துவிட்டோம்.

"இந்த ஊரின் பெயர் யாது சுவாமி?"

"திருவேரகம்; சுவாமி மலை என்றும் கூறுவார்கள்."

"தலைமேலே குவித்த கைகளுடன் அதோ வருகிருர் களே அவர்கள் யார் சுவாமி?"

---

பொங்கர(வு) ஆடலோன் புவனி யெங்கும்
எங்கும்மன் இராமன(து) ஈச்சரமே

"அவர்களுக்காகத் தான் நம் தலைவன் இங்கும் தங்கியுள்ளான். அவர்கள் தங்களுக்குரிய ஆறுவகைத்தொழில்களைத் தவறாமல் செய்பவர்கள். தாயும் தந்தையும் என்னும் இருவர் குலமும் நன்றென்று உலகத்தார் மதித்தனவாகிய பலவேறு பழங்குடிப் பிறப்பினர். நாற்பத்தெட்டுவருடங்கள் பிரம்மசாரிகளாக இருந்த பேராண்மையாளர். எப்போதும் தர்மத்தையே கூறும் விரதத்தையுடையவர்கள். மூன்று வகையாகச் சொல்லப்பட்ட வேள்வித் தீயைச் செல்வமாக உடையவர்கள். இருபிறப்புடையவர்கள் எனக் கூறப்படும் அந்தணர்கள். தாங்கள் வழிபடும் காலமறிந்து, ஒன்பது நூலை முறுக்கிய மூன்று புரிகளாகிய பூணூலையும், புலராத ஆடையையும் அணிந்துகொண்டு, தலைமேலே குவித்த கையினராய், கேட்டற்கரிய ஆறெழுத்து மந்திரத்தை (சரவணபவ) நாக்கானது புரளுமளவில் பலமுறை கூறிக்கொண்டு, நல்ல மணமுள்ள மலர்களைத் தூவி நமது தலைவனைப் புகழ்ந்து துதிக்கிறார்கள். அதனாலேயே திருவேரகத்தில் தங்கித் திருவருள்புரிகிறான்."

"ஆறுவகைத் தொழில்கள் என்பன யாவை சுவாமி?"

"அவை: (1) ஓதல், (2) ஓதுவித்தல், (3) வேட்டல், (4) வேட்பித்தல், (5) ஈதல், (6) ஏற்றல் என்பன."

"மூவகையாகக் கருதப்படும் வேள்வித் தீ யாது?"

"நாற்சதுரம், முச்சதுரம், வில்வடிவம் என்று கருதப்படும் ஆகவனீயம், தக்ஷிணாக்கினி, காருகபத்யம் என மூன்று. (வேதத்தை வழங்க ஒன்று, தேவர்க்கு தக்ஷிணை கொடுக்க ஒன்று, பூலோகத்தை ரக்ஷைபண்ண ஒன்று)."

"அந்தணர்களை இருபிறப்பாளர் என்பது ஏன் சுவாமி?"

அந்தணர்கள் பூணூல் அணிவதற்குமுன் ஒருபிறப்பும், அதன்பின் (உபநயனத்துக்குப் பின்) ஒரு பிறப்பும் எடுத்தவர்கள். எனவே இரு பிறப்பாளர் என்று அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

நாமும் இருபிறப்பாளரோடு ஏரகத்தானைத் தரிசித்துவிட்டு அடுத்த ஊருக்குப் புறப்படுவோம்.

"தங்கள் சித்தம் சுவாமி."

---

**அந்தமில் பாடலோன் அழகன் நல்ல**
**எந்தவன் இராமன(து) ஈச்சரமே**

# திருப்புகழ் விரிவுரை

## (குகஸ்ரீ)

இருவினை யஞ்ச வருவினை கெஞ்ச
இருள்பிணி துஞ்ச மலமாய—
எனதிடர் மங்க வுனதருள் பொங்க
இசைகொடு துங்க புகழ்கூறித்;
திருமுக சந்த்ர முருகக டம்ப
சிவசுத கந்த குகவேல—
சிவசிவ என்று தெளிவுறு நெஞ்சு
திகழநடஞ்செய் கழல்தாராய்;
மருதொடு கஞ்ச னுயிர்பலி கொண்டு
மகிழரி விண்டு மருகோனே!
வதைபுரி கின்ற நிசிசரர் குன்ற
வலம்வரும் செம்பொன் மயில்வீரா—
அருகுறு மங்கை யொடுவிடை யுந்து
மமலனு கந்த முருகோனே!
அருள்செறி பந்த ணையிலிரு மங்கை
அமளிநலங்கொள் பெருமாளே

(மருதொடு........விண்டு மருகோனே!)

(பொழிப்புரை:) மருதொடு உயிர் கொண்டு - மருத மரங்களைச் சாய்த்ததொடு, (அவைகளின்) உயிர்களைச் (சாப நிவாரணமாம்படி) கொண்டு;

கஞ்சன் பலி கொண்டு - கம்சனை மாய்த்து; மகிழ் அரி விண்டு மருகோனே - மகிழும் ஹரி எனும் பெயரையுடைய திருமாலின் மருகனே!

(வதை ..... குன்ற........வரும்........மயில்வீரா)

வதை புரிகின்ற நிசிசரர் குன்ற-(சத்துக்களைச் சித்திர) வதை செய்கிற அவுணர் குலம் அடியொடு கெட;

வலம் வரும் செம்பொன் மயில் வீரா - (உலகை) வலம் வருகின்ற சிறந்த அழகிய மயிலில் வரும் வீரா!

---

குழையது இலங்கிய கோல மார்பின்
இழையவன் இராமன(து) ஈச்சரமே

[அருகுறு...............முருகோனே)

அருகுறு மங்கையொடு - பக்கத்தில் உள்ள (சித்தான) பார்வதியாருடன்:

விடை உந்தும் அமலன் உகந்த முருகோனே - விடையை ஏறி நடத்தும் (சத்தான) மலரகித சிவனார் விரும்பும் இன்ப வடிவ இறைவா!

(அருள்செறி...............பெருமாளே)

அருள் செறி பந்தணையில் - அருள் நிறைந்த திருப் பந்தணை நல்லூர் எனும் அருமைப் பதியில்;

இரு மங்கை அமளி நலம் கொள் பெருமாளே - (வள்ளி தேவயானையர் எனும் இச்சை கிரியையாம்) இரு தேவியர்தம் கலவி நலம் கொண்ட பிரமஸ்வ ரூபமே!

(இருவினை அஞ்ச. ................மலமாய)

இருவினை அஞ்ச - (சஞ்சித பிராரத்துவம் எனும்) இரு வினைகளும் (என்னைக் கண்டு) அஞ்சவும்;

வரு வினை கெஞ்ச - ஆகாமிய வினை, (எனைத் தொடாதே விட்டுவிடு என்று) கெஞ்சவும்;

இருள் பிணி துஞ்ச - (அக) இருள் பரப்பும் ஆணவ நோய், (தன்) செயல் அடங்கவும்;

மலம் மாய - (எஞ்சிய அழுக்கான மாயா) மலம் (தன் பெயர்க்கு ஏற்ப) மாயவும்;

(எனது இடர் மங்க....உனது....புகழ்கூறி)

எனது இடர் மங்க - (மாபெரும்) என் இடர்ப்பாடுகள் மங்கிப் போகவும்;

உனது அருள் பொங்க - (புனித) உன் கருணை பொங்கி வழியவும்;

இசை கொடு துங்க புகழ் கூறி- இசையுடன் (பயனுள) உனது புனிதத் திருப்புகழைப் பாடி;

(திருமுக............கழல் தாராய்)

திருமுக சந்திர - மங்கள முகமான மதியாளா! முருக - மணவாளா!- கடம்ப - (மணம் நிறை) கடப்ப மாலையனே!;

---

அத்திய கையினில் அழகு சூலம்
வைத்தவன் இராமன(து) ஈச்சரமே

சிவசுத - சிவ குமரா!; கந்த - ஒருமையாளா!; குக - இதய அம்பலத்தில் இருப்பவனே!; வேலா - ஞான சக்திதரா! சிவ - அருள் சத்து ஆனவனே!; சிவ என்று - மௌனப் பேரொளியே என்று ஓயாது உருவேற்றி;

தெளிவுறு நெஞ்சு திகழ - (அதனால்) தெளிவு பெற்ற திருவுள்ளம் விளக்கம் பெற;

நடம் செய் கழல் தாராய் - (அவ்வுள்ளத்தில்) திரு நிருத்தம் செய்யும் திருவடி தரிசனம் நேரும்படி (அடியேற்கும்) உதவியருள், (எ-று).

## விரிவுரை

### மருது இறுத்த வரலாறு

பிள்ளைகள் இருவர் குபேரனுக்குப் பிறந்தனர். ஒருவன் பெயர் நளகூபரன். மற்றொருவன் மணிக்ரீவன். செல்வத்திற் பிறந்து வளர்ந்த இருவரும், எங்கும் செருக்கித் திரிந்தனர்.

மட்டு மரியாதையை மறந்தனர். அநியாய மதுவை அருந்தினர். இன்ப மதியை இழந்தனர். இன்ப அரிவையர் பலரை இழுத்துச் சென்றனர். அம்மணம் ஆக்கினர். நீரில் தள்ளினர். தாமும் நிர்வாணம் ஆயினர். குபீரென்று பொய்கையில் குதித்தனர். நெடுநேரம் இப்படி, பெண்களுடன் நீந்தி விளையாடினர்.

பட்டப் பகலில், இப்படி ஆணும் பெண்ணும் மாடுகளானால், கடவுள்தான் இவ்வுலகைக் காப்பாற்ற வேண்டும்.

எதிர்பாரா நிலையில், அவ்வழியில் மாதவ முனிவர் நாரதர் வந்தார். காரிகையர் யாவரும் கண்டனர். நாணினர். கரையேறினர். இருந்த ஆடையை எடுத்து உடுத்தனர்.

குபேரன் பிள்ளைகளும் கரையேறினர். ஏறிய போதை இறங்கியதில்லை. நிர்வாண நிலையில் நேரில் நின்றனர். அருந்தவர் நாணினர். அண்மையில் இருந்தது மருதமரம். அதையும் பார்த்தார். அவர்களையும் நோக்கினர். இதற்கும் இவர்கட்கும் என்ன வேற்றுமை?

---

**பாய்ந்த கங்கையொடு பட அரவம்**
**ஏய்ந்தவன் இராமன(து) ஈச்சரமே**

இந்த நெடுமரம்போல் நில்லுங்கள்! என்று, கொடுஞ் சாபம் கொடுத்தார். அவர்களும் அப்படியே ஆயினர். பலகாலம் இதே நிலை. உருண்டு காலச் சக்கரம் ஓடியது.

*    *    *

என் தங்கை தேவகி. அவட்குப் பிள்ளைகள் எண்மர் பிறப்பராம். இறுதி மகனால் எனக்கு இறுதியாம். அசரீரி யால் இதை அறிந்தேன்! பார்க்கிறேன் என்று, பதைத்துக் கருவி யிருந்தான் கம்ச பாதகன். பிறந்த ஏழு பிள்ளைகள் உயிரைப் பிரித்தான். எட்டாவது பிள்ளை பிறப்பது எப்போது என்று, உருவிய வாளுடன் கருவி இருந்தான்.

அவன் அறியாதபடி, தேவகி மகனாகத் தோன்றிய கண்ணன், வஸுதேவர் மூலம் ஆயர்பாடியை யடைந்தான். முறையே வளர்ந்தான்,

கோகுலத்தில், புனித கோபிகைகள் குடிசைகள் தோறும் புகுந்தான். அவர்தம் பால் தயிர் வெண்ணெய் களை வாரிப் பருகினன். திருட்டுக் கண்ணன் செயலைக்கேள்! என்று, யசோதையின் முன்வந்து இடைச்சியர் முறையிட்ட னர். கண்ணனைச் சினந்த யசோதை, கயிற்றால் வயிற்றில் கட்டினள். பெரிய உரலொடு பிணித்தாள்.

இருந்த உரலைக் கண்ணன் இழுத்தான். புழைக்கடைக் குச் சென்றான். அவனைக் கண்டு, புளகித்த இரு மருத மரங்களின் இடையில் புகுந்தான். இரு மரங்கட்கும் குறுக் காய் நின்று இழுத்தமையால், மரங்கள் இரண்டும் முறிந்து விழுந்தன. குபேர மக்கள் பெற்றிருந்த தொல்லை சாபம் தொலைந்தது. அந்த இரு உயிர்களையும் அரவணைத்தான் கண்ணன். இவ் வரலாறு, "மருதொடு—உயிர்கொண்டு" எனும் பகுதியில் வெளியாகின்றது.

கண்ணன் இளம்பிள்ளை விளையாட்டுகள் எண்ணிறந் தன. கம்சன் கண்ணனைக் கொல்லச் செய்த சதிகளும் அளவிலாதன.

கண்ணன், பலராமனொடு கம்ச சபைக்குச் சென்றான். அசுர ஆட்சியே ஆக்கம் என்று அதட்டினன் கம்சன். தெய்வ ஆட்சியே தேவை; உன் ஆட்சி ஒழியட்டும் என்றான் கண்ணபிரான். வாதம் வளர்ந்தது. மோதல் பிறந்தது.

---

அரியவன் ஆடலோன் அங்கை ஏந்தும்
எரியவன் இராமன(து) ஈச்சரமே

கம்சன் ஒழிந்தான். அவனுடன் அசுரப் பூண்டு அழிந்தது. ஹரிஹரி என்று அகில உலகமும், கண்ணனை ஆராதித்தது. கண்ணனாக அவதரித்த மாதவன் திருவுளம் மலர்ந்தது. இவ்வரலாற்றை, 'கஞ்சன் பலிகொண்டு' எனும் பகுதியில் அறிகிறோம்.

சாபம் தவிர்த்து, பாப ரூபனைப் பலிகொண்ட மாமனார்போல், சண்முனிவர் சாபம் அகற்றி, பாதக அவுணர்களைப் பலிகொண்டான் மருகன்; அந்த அருமையை எண்ணி, 'மகிழ் அரி விண்டு மருகோனே' என்று ஆர்வம் கொண்டு அழைத்தார்.

சாதுக்களை வதைப்பதில், சால மகிழ்பவர் அவுணர்கள். அவர்கள் ஆற்றல் அடங்க, அகில உலகிலும் பவனி வருகிறது, ஆங்காரம் அடக்கும் ஊங்கார மயில். அக்குடிலைக்கே உரியோனை,

'மயில் வீரா' என்று மகிழ்ந்து கூவுகிறார்.

பாதித் திருமேனியில் பார்வதியார்; அவர் சித்தானார்; அவரோடு தரும விடை ஊர்ந்து வரும் அமலர் சத்தானார்; இருவரில் இருந்து ஒருமை தோன்ற உதித்த இன்ப வடிவ இறைவனை, 'கந்த' என்றார்.

அவனே அழகிய மணமுள இளம் பரிபூரண ஓம் பொருளோன் என்பார், "முருகோனே" என்று வீரிட்டு விளித்தார்.

திருப்பந்தணை நல்லூர் என்பது, ஒரு தெய்வத் திருப்பதி. அங்கு, இச்சை கிரியை எனும் இருசித்திலும் சத்தாய்ச் சார்ந்து நலம் தருவானை,

'இரு மங்கை அமளி நலம்கொள்' என்றார்.

இத்தனையும் செய்யும் எங்கும் நிறை பெரிய பொருளே என்பார், 'பெருமாளே' என்று பேரிட்டழைத்தார்.

* * *

வினை மூன்று வகை. வந்தவினை, வருகின்ற வினை, வரும் வினை என அவை முத்திறம் பெறும்.

வந்த வினை சஞ்சிதம்; வருகின்ற வினை பிராரத்துவம்; வரும் வினை ஆகாமியம்.

---

ஆறது சூடுவான் அழகன் விடை
ஏறவன் இராமன(து) ஈச்சரமே

சஞ்சிதம் அனுபவித்த மிச்சம்; பிராரத்துவம் இப் பிறப்பில் அனுபவிப்பது: ஆகாமியம், மனம் வாக்கு உடலால் எடுத்த பிறப்பில் செய்வது.

சஞ்சிதவினை அருள் நோக்கில் சாம்பராம். இடையருத பிரார்த்தனையால், புனித குகன் உள்ளம் புகுந்தான்; உடவிடம் கொண்டான்; அதனுல், பிராரத்துவ மோதல் தோன்ருது. தோன்றுமெனினும், அதன் பாதிப்புகள் தோன்ருது திண்ணம்.

நின்னை மனம் நினைக்க, வாக்கு உன்னை வழுத்த, ஆக்கை வழிபாட்டை ஆவலிக்க, ஆகாமியம் அணுகவே அணுகாது.

நான் வலிந்து முயன்ருலும், வேண்டா! என்னைத் தொட வேண்டா என்று கெஞ்சிக் கொஞ்சி அவை தூரம் போம்!

இருள் இருவகை. ஒன்று புற இருள்; மற்ருென்று அக இருள்.

புற இருள், தன்னைக் காட்டும்; தலைவனைக் காட்டாது.

அக இருள், தன்னையும் காட்டாது; தலைவனையும் காட்டாது.

அக இருள், பிறவி நோய் நேரப் பெருகும். இந்த ஆணவ நோய், என் மட்டில் தூங்கிவிடும். மாயா மலமும் மாய்ந்துபடும்.

இப்பேறு எளியேற்கு நேர, வழிவகை அறிந்துளன்.

தங்கிய என் துயர் மங்கவும், பொலிவுறு நினது அருட் புகழ் பொங்கவும், ஓயாது உனது திருப்புகழே ஓதுவேன்.

திருமுக சந்திர! முருக! கடம்ப! சிவசுதா! கந்தா! குக! வேல! சிவ! சிவ! என்னும் ஒன்பது நாமங்களை, ஓயாது உருவேற்றுவார் தெளிந்த மனத்தில் திருநடம் செய்யும் உன் திருவடி என்பர்.

அரிய அத்திருவடி தரிசனம் அடியேற்கும் நேர அருள் என்று, பெருமானை வேண்டிப் பிரார்த்தித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்!

---

# வினை விடுதல்

(கி. வா. ஜ)

மனிதன் வாழும்போது பல பொருள்களிலே பற்றுக் கொள்கிறன். பல மக்களிடம் ஈடுபட்டு அவர்களுடைய நலந் தீங்குகளுக்காக அவன் கவலை அடைகிறன். மண் என்றும் பொன் என்றும் பெண்ணென்றும் ஆசைப்படு கிறன். இத்தகைய ஆசையால் அவன் மேலும் மேலும் துன்பத்தையே அடைகிறன். ஆசை உண்டானல் அதனுடன் தொடர்ந்து பொறாமை, பகை முதலிய தீய குணங்களும் வந்துவிடும். அதனல் இம்மை வாழ்வில் அவன் பிறமக்களால் துன்புறுகிறன். தானே பலவற்றை நினைந்து ஏங்கித் துயருறுகிறன்: அதனல் தான் திருமூலர்

''ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே''

என்றர்.

மக்கள் யாவருமே துறவியராக முடியாது. புறத்தே துறப்பதைவிட அகத்தே துறப்பது சிறந்தது. ஒருவன் இல்வாழ்வில் வாழ்வது தவறு அன்று; பொருளை ஈட்டு வதும் தவறு அன்று. ஆனல் அந்தப் பொருளிலே பற்றுக் கொண்டு அதைச் சேமிப்பதில் நாட்டமுடையவனகிப் பிற கடமைகளைப் புறக்கணித்து வாழ்வதுதான் தவறு. அதற்கு மாற்று, தான் பெற்ற பொருளை அறத்தாற்றிலே செலவிடுதல். அப்படிச் செய்வதனல் அவனுக்குப் பொரு ளின்பால் உள்ள பற்று அறும். மேலும் மேலும் அறம் செய்யப் பொருள் ஈட்டும் முயற்சி அருது. ஆதலின் மனித

---

**கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறு திருநீலகண்டம்**

வாழ்க்கையில் முதற் கண் கடைப்பிடிக்க வேண்டுவது அறம் என்று வைத்தார்கள். அறம் என்பது மனிதன் செய்ய வேண்டிய பல கடமைகளையும் குறிக்குமாயினும், அக்கடமைகளில் தலையாயது ஈகை. ஔவையார்,

''ஈதல், அறம்''

என்று கூறினர், தான் பெற்ற பொருளைப் பிறருக்கு ஈயும்போது அதைப் பெறுபவர்களிடம் இரக்க உணர்ச்சி எழுவது இயல்பு. அந்த உணர்ச்சி இருந்தால்தான் கரவாமல் கொடுக்கத் தோன்றும்; அதுமட்டும் போதாது. இறைவனுடைய நினைப்பும் உடன் இருக்க வேண்டும். இரப்பவர்களும் இறைவனுடைய குழந்தைகள் என்பதையும், முன்னைப் பிறவியிலே செய்த தீவினையின் பயனாக அவர்கள் இரக்கிறார்கள் என்றும், தான் செய்த நல்வினையின் பயனாக அவர்களுக்கு ஈயும் நிலை தனக்கு அமைந்திருக்கிறதென்றும், இந்த இரண்டு நிலைகளையும் உண்டாக்கி அருள் பாலிப்பவன் இறைவன் என்றும், தான் கொடுப்பதனால் உயர்ந்தவனாவதில்லை என்றும் எண்ணும் மனப்பாங்கு அப்போது அவனுக்கு உண்டாகும். இரப்பவனைக்கண்டு அவமதிப்பும், ஈவதனால் ஏற்படும் செருக்கும் அவனிடம் உண்டாவதில்லை. இறைவன் ஈகைக்கு ஒரு கருவியாகத் தன்னை வைத்தானே என்று நினைந்து உருகுவான்.

இத்தகைய உண்மை உணர்ச்சி வந்தால் அவன் உள்ளம் தெளிவுபெறும். கலக்கமின்றி வேதனையின்றி நிலவும். பிறவிதோறும் வருகின்ற நீண்ட வேதனைகளாகிய கோபதாபங்கள் இந்த மனப்பாங்கினால் அழியும். இறையுணர்வாகிய தீயின்முன் அந்த வேதனைகள் தூள் பட்டுப்போகும்; எரிந்து சாம்பலாகிவிடும்.

---

**பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்**
**தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்**

**கெடுவாய் மனனே! கதிகேள்: கரவா**
**திடுவாய்; வடிவேல் இறைதாள் நினைவாய்;**
**சுடுவாய் நெடுவே தனைதூள் படவே**
**விடுவாய், விடுவாய், வினையா வையுமே!**

இறை உணர்வு வளரவளர அறமும் வளரும். அதனால் அவனைச் சார்ந்திருந்த முன்னைவினைகள் ஒத்து நிற்கும். இருவினை ஒப்பு உண்டாகும். அதனைத் தொடர்ந்து மலபரிபாகமும் சத்தினி பாதமும் அமையும். ஞானம் கைகூடும். அப்போது அவன் வினைகளின் தொடர்பின்றி வாழ்வான். யான் எனது என்னும் செருக்கு அறுத்துச் செயல்மாண்டு நிற்றலால் அவனை எந்தவினையும் சாராது. வினையாவையும் அவனை விட்டுவிடும். அவன் எல்லா வினைகளையும் விட்டுத் தூயனாய் இறையருளின்ப அநுபவத்திலே தேங்கினவனாய் நிற்பான்.

பக்தியின் உச்சநிலையிலே நின்றவர்கள், ஈகையிலே சிறந்து நின்று, இன்பதுன்ப எல்லைக்கு அப்பாலே இறையருள் இன்பத்தை நுகர்ந்து வாழ்ந்ததற்குப் பெரிய புராணம் சான்று பகர்கிறது. இயற்பகையார், இளையான் குடி மாற நாயனார் முதலியவர்கள் அவ்வாறு நின்றவர்கள்

உலக வாழ்வில் ஈடுபடுத்திப் பொறி இன்பம் நுகர்வதற்குக் கருவியாய் நிற்பது பொருள். மண்ணாசை, பெண்ணாசை என்னும் இரண்டையும்விட அது விரிந்தது. அரசர் மண்ணாசை கொள்வர். பருவமுடையார் பெண்ணாசை கொள்வர். பொன்னாசையோ எல்லோரையும் பற்றுகிறது. அதனை விடுவது எளிதன்று. கிழவனும் தன் துணியில் ஒரு ரூபாயை முடிந்து வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறான். ஆதலின் அதை மாற்றத் தொடங்கினால் மனம் வேதனை நீங்கித் தெளிவுபெறும். அதற்கு வழி பற்றறுத்தலும், பற்றற்றான்பற்றினைப் பற்றுதலும் ஆகும். இதையே அருணகிரியார் இந்தப் பாடலில் சொல்கிறார்.

---

இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெறு திருநீலகண்டம்

உ

திருமுருகா துணை

# செப்பிடுவித்தை

## (V. R. G.)

செப்பிடு வித்தையென ஒருவகை வித்தையுண்டு. செப்புக்கிண்ணங்களைக் கவிழ்த்து அதனுள்ளிருந்து பல பந்துகளை வரவழைப்பார்கள். முதலில் நாம் கண்முன் பார்த்த அநேக பந்துகள் அந்த செப்பிலிருந்து மறைந்து போகும். ஒரு காலி செப்பிலிருந்து பல பந்துகள் வெளி வரும்! இதைச் செப்பிடுவித்தை என்பர்.

இதையே தில்லையாண்டவனின் பக்தராகிய முத்துத் தாண்டவர் ஒரு கீர்த்தனத்தில் நன்கு விளக்கி யிருக்கிறார். அவர் கீர்த்தனத்தின் ஒரு பகுதி.

சரணம்

செப்பிடு வித்தைகள், எப்படி உலகத்தில்
உடலே செப்பாக, உயிரே பந்தாக,
செப்பிடு வித்தைகள், ஆடிய பின்பு,
செப்புமில்லை, பந்தும் இல்லை யென்றொலிக்கும்

பல்லவி

சித்தரின்னம் உண்டோ? பூலோகத்தில்,
சித்தரின்னம் உண்டோ?

என்றார்.

வித்தைக்காரன் செய்யும் கை ஜாலங்களை நாம் கண்டு கொள்ளமுடியாது. அவன் நம் கண்களையும் மனதையும் ஒரு வகையில் கட்டிவிடுகிறான்.

அதே போல நம் ஆண்டவனாகிய திருமுருகன் என்ன ஜாலவித்தை ஆடுகிறார்? அதன் ஆதி அந்தம் என்ன? மனமே! நீ அதை அறிந்துகொள்ள வேண்டாமா?

---

கண் இமையாதன மூன்றுடையீர்! உம்கழ லடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெரு திருநீலகண்டம்

திருமுருகன் நிகரற்ற தன் வல்லமையால் நினைத்த மாத்திரத்தில் அநேக (ரயில்) வண்டிகளை உண்டாக்கு கிறார்! அந்த வண்டிக்குள் அநேகம் அதிசயம் நிறைந்த, தானே இயங்கும் இயந்திரங்களையும் மற்றும் அநேக வசதி களையும் உருவாக்குகிறார்! ஒவ்வொரு வண்டிக்கும் ஒரு குட்டி எஜமானனை அந்த வண்டிக்குப் பொறுப்பாளியாகப் படைக்கிறார்.

அவனிடம் அந்த வண்டியின் நிர்வாகத்தையும் அதை நன்கு நிர்வகிக்க விசேஷ. சக்தி (அறிவு)யையும், அளிக்கிறார்.

பின்பு அந்த வண்டிகளின் நிர்வாகிகள் யாவரையும் அழைத்து, (ஓர் திருவிளையாடல் புரிய எண்ணம் கொண்டு) அவர் ஏற்படுத்தும் பந்தயப் போட்டியில் கலந்துகொள் ளும்படி கூறுகிறார். என்ன பந்தயம்?

அதாவது இந்த வண்டிகள் யாவும் வடக்கு திசையி லிருந்து புறப்பட்டு, தென் திசை நோக்கி நூறுமயில்கள் வரை விரைவாகச் சென்று நின்று விடும். எப்படி ஏகபரம் பொருளாகிய யான், இந்த வண்டிகளையும் உங்களையும், மற்ற விநோத வசதிகளையும், என் வல்லமையால் உண் டாக்கினேனோ, அதேபோல் தென்திசையடைந்து வண்டி நின்றவுடன், நான் என்றால் உண்டாக்கப்பட்ட உங்களை யும் மற்றவைகளையும் என்னுள் அடங்கச் செய்து, நானே ஒருவனாய் நின்று விடுவேன். இந்த வண்டிப் புறப்பட்டு ஓடி நிற்கும்வரை, நான் இந்த வண்டியை ஓட்டுபவனாக வும் பாதுகாப்பாளனாகவும் உருக்கொண்டு, உங்கள் கண்ணில் படாமல் ஒளிந்திருந்து பணியாற்றுவேன்!

இதில் நான் கூறும் பந்தயம் என்னவென்றால், எவ னொருவன் இந்த வண்டி தென்திசையடைந்து நிற்பதற்குள் இந்த வண்டிக்குள்ளேயே இருக்கும் என்னைத் தேடி, நான் வண்டியோட்டும் செயலையும், பாதுகாப்பாளனாகப் பணி யாற்றும் நிலையையும் உணர்ந்து, என்னைக் கையும் மெய்யு மாகக் கண்டுபிடித்துவிடுகிறானோ, அவனே இந்தப் பந்த

---

சொற்றுணை வாழ்க்கை துறந்தும் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெரு திருநீலகண்டம்

யத்தில் ஜெயித்தவனுவான். அவனே என்னுல் அளிக்கப் படும் (முழு) முதல் பரிசை அடையத் தகுதி பெற்றவன் என்கிருர்.

உடனே குட்டி எஜமானர்கள் யாவரும் மிக்க சந்தோஷத்துடன், பலே! சரி! சரி! அப்படியே பார்க்க லாம் எனக் கூறி, நான்தான் முதலில் ஜெயிப்பேன்! நான்தான் முதல்பரிசு பெறுவேன் என ஒருவர்க்கொருவர் பந்தயம் கூறிக் கொள்கின்றனர்!

மெள்ள ரயில் வண்டி நகருகிறது. சிறிது பிரயாணம் வரை மிக்க அமைதியான நிலே. ஒவ்வொருவருக்கும் நாம் தாம் ஜெயிப்போம் எனும் நம்பிக்கை வளருகிறது.

எந்தப் போட்டிப் பந்தயத்திலும் ஜெயிப்பதற்குமுன், பல எதிர்ப்புக்களேயும், இடையூறு, தடங்கல்களேயும் தன் அறிவாலும் ஊக்கத்தாலும் கடந்தாக வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்தப் போட்டியில் வெற்றி அடை வோருக்கு ஒரு பெருமை உண்டாகும். போட்டிப் பந்தயத்தைப் பார்ப்போருக்கும் சுவாரஸ்யமா யிருக்கும் அல்லவா?

இதை மனதிற் கொண்டே ஆண்டவன், வண்டி சில மயில்கள் சென்றதும், மெள்ளத் தன் ஜால வித்தைகளே ஆரம்பிக்கிருர்! மறதி எனும் சொக்குப் பொடியை மெள்ள வண்டியினுள் புகும்படி தூவுகிருர்! அதன்பின் பசி, தாகம், அவா, விளேயாட்டு எனும் மாயா சக்திகளே, போட்டியில் கலந்துள்ளோர் எளிதில் ஜெயமடைய விடா மல் தடுக்க ஏவுகிருர்.

வித்தையாடி இத்துடன் விடுகிருரா? இல்லே. வண்டி கள் பாதி வழி செல்வதற்குள் மிக்க சுறுசுறுப்புடன், காம க்ரோத லோப மோக மதமெனும் எண்வித பூதங்களே சிருஷ்டித்து, அதை வண்டியிலுள்ளோர் மனதிற் புகுந்து அவர்கள் பரிசு பெறுவதைக் கஷ்டமாக்கும்படி செய்கிருர்!

---

**பறித்தமலர் கொடுவந்(து) உமையேத்தும் பணியடியோம்**
**சிறப்பிலித் தீவினே தீண்டப்பெரு திருநீலகண்டம்**

இதில் இன்னொரு விநோதம் என்னவென்ருல், வித்தையாடி ஏற்படுத்திய இவ்வளவு தடங்கல்களையும் கடந்துவிடா முயற்சியாலும், சலியாத ஊக்கத்தாலும் எவரேனும் வெற்றி பெறக்கூடிய நிலையை அடைவார்களாயின், அவர்களையும் ஏமாற்றக் கடைசி ஆயுதமாக ஒன்று வைத்திருக்கிருர். அது என்ன தெரியுமா?

அதுதான் நான் எனது எனும் தொத்து நோயாகிய பிரும்மாஸ்திரம். இந்த நோயை, போட்டியில் ஜெயமடைந்து பரிசு பெறும் தருணத்தில் இருப்போர் மீது ஏவி விடுகிருர். இது மிகக் கொடிய நோய்! மிக்க வல்லவரையும் மிக்க சுலபமாய்த் தன் வசமாக்கி வேறு வழியில் திருப்பிவிடும்!

மனமே! இவ்வளவையும் அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்தாயே. உன் நிலை என்ன? நீ என்ன செய்யப் போகிருய்? இந்தப் போட்டியில் எந்த அளவு கலந்து கொண்டிருக்கிருய்? மனதின் மவுனம்!

திருமுருகா! (இந்த வண்டியாகிய) ரயிலை, வெற்றி மயிலாகவும், (கடந்து செல்லவேண்டிய) மயில்களைத் தோகை மயிலாகவும் மாற்றி, என் இரு பக்கமும் துணையாய் வர அமைத்து, நீ என் இதயக் கோவிலில் அமர்ந்து, என் செயல் பொறுப்பு யாவையும் நீயே ஏற்று நடத்தி, ஜெயம் கண்டு, நீ ஏற்படுத்திய பரிசை நீயே எனக்கு உவந்தருள வேணும்!

"எவரெவ ரிச்சையில் எவையெவை யுற்றன
அவை தருவித்தருள் பெருமாளே!" —திருப்புகழ்.

---

பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்ருேம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெரு திருநீலகண்டம்

# Divine Life and Universal Service

To live in the consciousness that all life is divine, will make for the divine life. Four maxims may be said to be the four foundations on which alone the divinity of life rests. There is but one God and one only. He pervades all. He is omnipresent and omniscient. This unalterable faith that inspired Sri Prahladha is the *first article of faith* on which alone divine life can grow. He is the life of every life. Hence there is no life anywhere in the world within which the Lord does not reside and which the Lord does not inspire. This second article of faith must make us realise that all men are but moving tabernacles of God, worthy of our respectful consideration and love. Universal love thus becomes the *second article of faith.* Faith and love are dynamic and not merely static. The true expression of faith and love constitutes life. God who is the All Life, who is the One Life, manifests himself in the multitudinous lives of creation. The multitudinous lives thus become the objective expression of the one Entity. The objective expression of faith and love becomes service - universal service. All creatures only live to serve and in service to realise the divinity in their existence. This universal service becomes the worship of God. On the wake of the realisation of the three articles of faith mentioned above, in one's own conduct emerges the last

step - the attainment of *Mukti* or *Salvation* - that we live, move and have our being in God. Divine life links transient man with eternal Godhood and ecstacy. Man becomes the master of time. The joy of being dissolves the so called sorrows of birth and death. Bhakti or Godlove begins in the passionate love of God. It culminates in the love for His creatures in whom He lives, leading to service universal.

*Thiruppugal Mani.*

---

மெய்யனை மெய்யில் நின்றுணர் வானை
மெய்யி லாதவர் தங்களுக் கெல்லாம்
பொய்ய னைப்புரம் மூன்றெரித் தானைப்
புனித னைப்புலித் தோலுடை யானைச்
செய்யனை வெளிய திருநீற்றில்
திகழும் மேனியன் மான்மறி ஏந்தும்
மைகொள் கண்டனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத்தை மறந்(து) என்நினைக் கேனே!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1958 புரட்டாசி—அமிர்தவசனி

**Coffee**
**Ours for Quality**

RAW, ROAST OR GROUND

GANESH & CO. (MADRAS). LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

## அரிய தெய்வ அருள் நூல்கள்

குக ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளியெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |
| தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) ,, (அச்சில்) | | | |
| சிவநேயச் செல்வர்கள் ,, ,, | | | |
| கணபதி பக்தர்கள் ,, ,, | | | |
| முருகனடியார் ,, ,, | | | |

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.